Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

கபிஸ்னா கூல் பார் & உணவகம்



திருமண சொகுசு கார்
ஹயேஸ் வான்
ஆட்டோ





(C/1626)
யாழ்-கொழும்பு
A/C வான்சேவை
சந்நிதி வீதி,
பஸ் நிலையம் அருகாமை, அச்சுவேலி.
0773618014
0779361339
0213213021

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 13 சனிக்கிழமை (28.07.2012) பக்கங்கள் 20 | ஓசை – 301


















# பரிந்துரைகளின் அமுலாக்கம் இணைந்து செயற்பட முடியாது

## கைவிரிக்கிறார் சம்பந்தன்


(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்செய்வதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இல்லை என்று அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேற்படி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்குத் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை அரசு வரைந்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் இந்தத் தேசிய வேலைத்திட்டம் குறித்து எமக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இதனால் அத்திட்டம் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. எனவே இந்த வேலைத்திட்டம் தொடர்பாக இப்போது கருத்துக் கூறவும் அத்திட்டத்துடன் இணைந்து செயற்படவும் எம்மால் முடியாமல் உள்ளதாகவும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## ஜூனியர் சுப்பர் சிங்கர் யாழ்ப்பாணத்தில்



விஜய் ரிவி சுப்பர் சிங்கர் (ஜூனியர்) பட்டம் வென்ற பாடகி அல்கா அஜித் இசை நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார். நேற்று நெல்லியடியில் 3.00 மணிக்கும், இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 4.00 மணிக்கும் இந்நிகழ்வு நடைபெறும். இந்நிகழ்விற்கு அன்ரா நிறுவனம் ஆதரவு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காணிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய ஆணைக்குழு விரைவில்

காணிப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணும் வகையில் நான்காவது ஆணைக்குழுவொன்றினை விரைவில் ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் காணிப்பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினைக் கண்டுவிட முடியுமெனவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இணைந்து வெளிவிவகார அமைச்சில் நேற்று கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்துவது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தபோதே ஜனாதிபதியின் செயலாளர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது:

நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒவ்வொரு பரிந்துரையும் ஒன்று அல்லது

(19) ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார். இவர்களை இந்தியக் கடற்படையிடம் ஒப்படைப்பதற்கான முயற்சிகளை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# முழுவீச்சில் தொடரும் மீள்குடியமர்வு



(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுதிக்கப்பட்ட பகுதிகளைத் துப்பரவு செய்யும் பணி தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. இதற்காக விசேட நிதி ஒதுக்கீடுகளும் செயயப்பட்டிருக்கின்றது.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக பளை, வீமன்காமம் வடக்கு, தெற்கு மற்றும் மாவிட்டபுரம் தெற்கு (பட்டிக்கடவை, மாவிட்டபுரம் (ஜே/236,ஜே/237,ஜே/232, ஜே/231) ஆகிய நான்கு கிராம

(19) ஆம் பக்கம் பார்க்க

# என்னைக் கொலை செய்வதற்கு சதிவலை பின்னப்பட்டது



இலங்கை சென்றிருந்தபோது தன்னை குண்டுத்தாக்குதல் மூலம் கொலை செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததாக இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இவர் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா குமாரதுங்கவைச் சந்திப்பதற்காக இலங்கை வந்திருந்தார். இதன்போதே தன்னைக் கொலை செய்யவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாக எரிக் சொல்ஹெய்ம் 12 வருடங்களின் பின்னர் தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஒருவருக்கு ஏழு பதவிகள் பிரதேச சபையில் விநோதம்

## பொறிபறக்கும் விவாதம்

(சுன்னாகம்)


வலி. தெற்குப் பிரதேச சபையின் சீரற்ற செயற்பாடுகள் காரணமாக நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், வலி. தெற்குப் பிரதேச சபையின் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள பிரதேச சபைமண்டபத்தில் இடம்பெற்றது.

தவிசாளர் கூட்டத்திற்கு சமூகமளிக்காத நிலையில் உப தலைவர் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. பிரதேச சபையின் விடயங்கள் தொடர்பாக ஆராய்வுகள் இடம்பெற்ற வேளை பிரதேச சபையால் நியமனம் வழங்கப்பட்ட ஊழியர் ஒருவரின் செயற்பாடுகள், அவ ரின் நியமன விபரம், பணிகள் தொடர பாக எதிர்க்கட்சித் தலைவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# லண்டனில் ஒலிம்பிக் நேற்று கோலாகல ஆரம்பம்



(லண்டன்)

உலகின் மிகப்பெரிய விளையாட்டாக வர்ணிக்கப்படும் ஒலிம்பிக் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது. இங்கிலாந்தின் வரலாறு குறித்து, மைதானத்தில் விரிவாகக் காண்பிக்கப்பட்டது. அப்போது நூற்றுக்கணக்கில் வீரர்கள் அரங்கில் தோன்றினர். இங்கிலாந்தில் நடந்த தொழிற்புரட்சியை நினைவுபடுத்தும் வகையில், சிம்னி விளக்குகளுடன் தோன்றினர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

புதிர்ப்போட்டி 3 உள்ளே பக்கம் 12

# நல்லூர் ஆலய சூழலில் தெய்வீக நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி ஆலயத் திருவிழாவினை முன்னிட்டு ஆலயச் சூழலில் பல்வேறு நிகழ்வுகளுக்கு தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்று 5 ஆம் திருவிழாவினை முன்னிட்டு -

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கில் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 - 7.40 வரையும் எஸ்.சுதாகரனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. இதில் வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் என்.சதீஸ்குமார் இசைக்கவுள்ளனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மீக சிந்தனைச் சமயச் சொற்பொழிவு தொடரில் க.ஈஸ்வரன் 'நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

பிற்பகல் 3.00 - 6.00 மணி வரையும் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளின் சொற்பொழிவினைத் தொடர்ந்து வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப் பாடசாலை, சித்திரமேதி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, இளவாலை ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (42)

# புனர்வாழ்வு பெற்றவர்களுக்கு கடன் அலரி மாளிகையில் வைபவம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அதிகார சபையினால் தெரிவுசெய்யப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் நிவாரணக் கடன் காசோலை வழங்குதல் தொடர்பான நிகழ்வு நாளைமறுதினம் பி.ப. 2.00 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நிவாரணக் கடன் பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் அனைவரையும் நாளை பி.ப. 5.00 மணிக்கு முன்னதாக பயண ஒழுங்குகளுடன் மாவட்ட செயலகத்திற்கு சமுகமளிக்குமாறும், இவர்களுக்கான போக்குவரத்து, தங்குமிட வசதிகள், மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இதில் 173 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



1 ஆவது அகவையில்

HAPPY BIRTHDAY

பெயர்: அ.அபிசோக்

முகவரி: நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்: அப்பா, அம்மா, அக்கா



## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 1964 ❖ 02 ❖ 27



இறப்பு 2010 ❖ 07 ❖ 28

## யோசப் யசிந்தா

எம் இதய தெய்வமே நீங்கள் எம்மைப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டுதான் சென்றதம்மா
ஆனால் எம் ஆறாத் துயர் என்றும் எம்மை விட்டு
சென்று விடாது
விண்ணுலகில் இருக்கும் உங்களுக்காக இப்
பூவுலகில் ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/1629)

இங்ஙனம் உம் பிரிவால் வாடும்
பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்

கரம்பொன் தென்கிழக்கு,
ஊர்காவற்றுறை.


# வரலாற்று ஆவணமாக்கல் முன்னோடி நூல் வெளியீடு

பா.இரகுவரன் எழுதிய பருத்திநகர் பற்றிய சமூகவியல் வரலாற்று ஆவணமாக்கலும் ஆய்வும் முன்னோடி நூல் பருத்தித்துறையூராம் என்னும் பெயரில் புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்றத்தில் நாளை பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா ஞானசம்பந்தர் கலைமன்ற முகாமைத்துவ ஆலோசகர் க.இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.சி.ஜெயசீலன் ஆற்றுவார். இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமதி ரஞ்சினி கௌரிபாலாவும், வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.சிவபாலன், பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபா ரவீந்திரன் வழங்கவுள்ளார்.

நூலின் கருத்துரைகளை யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரட்ணம், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி சேனாதிராசா செல்வசுகுணா ஆகியோர் வழங்கவுள்ளனர். (62)

# கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

கரப்பந்தாட்டத் துறையை வளர்க்கும் முகமாக ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி முகாமிற்கு கிரிடா சக்தியின் யாழ்.மாவட்ட நிகழ்ச்சி திட்டப்பணிப்பாளர் நந்தசேனா கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார். அத்துடன் கரப்பந்தாட்டப் பயிற்றுநர்களான தயாள பாலன், தர்மிகன் ஆகியோரும் இணைந்து பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (93)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளையின் கலந்துரையாடல் நிகழ்வு நாளை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சேவைப் பாசறை, கலைக்கூறு 1,2 இற்கான பயிற்சி, அணித்தலைவர்களுக்கான பயிற்சி - 2, ஆணைப் பத்திரத்திற்கான அனுமதிக் கடிதம் என்பன வழங்கப்படவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களை சாரணர் சீருடையுடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# பண்ணிசைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நூலக மேல்மாடியில் நாளை காலை 9.00 மணிக்கு அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் தேவார பண்ணிசைப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு சைவ ஆசார சீலர்களான பரீட்சை மண்டபத்திற்கு வருகை தருமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுள்ளார்.


## கேள்வி அறிவித்தல்

## ஊர்காவற்றுறை பிரதேச சபை - ஊர்காவற்றுறை

1. தவிசாளர், பிரதேச சபை பெறுகைக் குழு சார்பில் ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான இப்போது தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு M6/C7 தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை (தொலைபேசி இல: 021-3212398) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன் இம்முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை,, ஊர்காவற்றுறை (தொலைபேசி இல: 021-3212398) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 30.07.2012 முதல் 20.08.2012 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 2000/- ஐ கட்டணமாக செலுத்தி பெற்றக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 21.08.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாகக் கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 21.08.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை 07.08.2012 அன்று 10.30 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| CLG/KPS/LIB/2012/01 | புளியங்கூடல் பொது நூலக நிர்மாணம் | 6.54 | 03 மாதங்கள் | M6/C7 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 100,000.00 | 03.12.2012 வரை |

ம.ஜெயகாந்தன்
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

(C/1628)

# தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப சிறார்கள் வழிநடத்தப்படவேண்டும்

## நீதிபதி மா.கணேசராசா

(யாழ்ப்பாணம்)

எமது சிறார்களின் எதிர்காலம் சிறப்புற உடலியல் ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் அவர்களைப் பாதுகாப்பது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும் என யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா தெரிவித்துள்ளார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் உள்ள சிறார்களை நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டு அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறிப்பாக சிறுவர் இல்லங்களில் வளருகின்ற பிள்ளைகள் தமது முன்னைய மனத்தாக்கங்களை மறந்து வாழவும், எதிர்காலம் சுபீட்சம் நிறைந்ததாக இருக்கும் என்ற நம்பிக்கை ஊட்டும் விதத்தில் வளர்வதற்கு எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறான பிறந்த நாள் கொண்டாட்டங்கள் பழைய வடுக்களுக்கு அருமருந்தாக அமைவதுடன், தமக்கு ஒருவரும் ஆதரவாக இல்லையே என்ற உணர்வையும் போக்கடிக்கும் வகையிலும் அமையும்.

இல்லங்களில் ஆன்மிக நெறியையும் நல்லொழுக்கதையும் கற்பிப்பதுடன் எதிர்காலம் வளமுறுவதற்கு தொழிற் கல்வியையும் கற்பிப்பது அவசியமாகும்.

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ந்து விட்ட நிலையில் புதிதாக உருவாக்கும் திறன்மிக்க எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சிறார்களை வழிநடத்துவது எம் எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

இன்று இச்சைவச் சிறுவர் இல்லத்திலே வளர்கின்ற குழந்தைகளின் எதிர்காலம் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை நன்னடத்தை உத்தியோகத்தர், பணியாளர்கள் மற்றும் 186 சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

# அறிவுறுத்தல் கூட்டம்

(அச்சுவேலி)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆறாம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் போது பரீட்சை நிலைய இணைப்பாளர்கள், உதவி இணைப்பாளர்கள் பிரதம மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் போன்ற பல்வேறு பதவிகளில் பணிபுரியவுள்ள உத்தியோகஸ்தர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் குழுவினரால் நடாத்தப்பட்டுள்ளது.

வலய ரீதியாகவும், கோட்டரீதியாகவும் இடம்பெற்ற இவ் அறிவுறுத்தற் கூட்டத்தின் போது ஒவ்வொரு உத்தியோகத்தர்களதும் கடமைப் பொறுப்புக்கள், மற்றும் செயலொழுங்குகள் தொடர்பான அனைத்து விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. (03)

# பொதுக்கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

குருநகர் சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விசேட பொதுக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

ஆலய போசகர் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெறும் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் புதிய நிர்வாகத் தெரிவும் பாலஸ்தாபனம் மற்றும் கும்பாபிஷேகம் என்பன குறித்த கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

அத்தோடு இன்று சனிககிழமை காலை 8 மணிகக்கு ஆலயத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ள இருப்பதால் அடியார்கள் அனைவரும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொள்கின்றனர். (138)

# இறுவட்டு வெளியீடு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு அருள்மிகு உலவிக்குளம் சித்தி விநாயகர் மீது பாடப்பட்ட பக்திப் பாமாலை இறுவட்டு ஆலய மஹோற்சவ ஏழாம் திருவிழாத் தினமாகிய இன்று சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த பிரபல ஆசிரியர் சத்தியமூர்த்தியின் முயற்சியினால் வெயிடப்படும் இவ் இறுவட்டிற்கான பாடல்களை அவ்வூரைச் சேர்ந்த மூத்த நாடகக் கலைஞர் சி.விவேகானந்தன் இயற்றியுள்ள அதேவேளை ஈழத்தின் புகழ்பெற்ற பாடகர் எஸ்.ஜீ.சாந்தன் பாடியுள்ளார். (03)

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்க பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளையின் கலந்துரை யாடல் நிகழ்வொன்று நாளை ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சேவைப் பாசறை, கலைக்கூற்று 1, 2 இற்கான பயிற்சி, அணித் தலைவர்களுக்கான பயிற்சி - 3 ஆனைப்பத்திரத்திற்கான அனுமதிக் கடிதம் என்பன வழங்கப்படவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களை சாரணர் சீருடையுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# ஒளித்தெறி கருவி அன்பளிப்பு

(காரைநகர்)

காரைநகர் சுவிஸ் அபிவிருத்திக் கழகத்தினரால் காரைநகர் ஊரி அமெரிகக மிசன் பாடசாலைக்கு ஒளித்தெறி கருவி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நிறுவனத்தால் காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு தொலைநகல் இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரம் என்பவை வழங்கப்பட்டுள்ளது.


இந்நிகழ்வில் காரைநகர் அபிவிருத்தி சபையின் தலைவர் எஸ்.சோமசேகரம், பிரதேச சபை உறுப்பினர் பாபு ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பாரம்பரியத்தை பறைசாற்றும் தண்ணீர்ப் பந்தல்

(சிகரம்)

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவகாலத்தில் 89 வருடங்களுக்கு மேலாக இன்றுவரையும நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் தாகசாந்தி நிலையத்தை அமைத்து சேவை வழங்கி வருகின்றனர்.

நல்லூர் ஆலயச் சுற்று வட்டாரத்தில் காணப்படும் தண்ணீர்ப் பந்தல்களில், 75 அடி நீளமும், 46 அடி அகலமும் கொண்ட இந்தத் தண்ணீர்ப் பந்தல் தாகசாந்தி நிலையமே முற்று முழுதாக கிடுகுகளாலும், பனை மரங்களாலும் அமைக்கப்பட்டுள்ளது.




கிடுகுகளுக்கென 80,000 ரூபாவும், உள்ளே பரவுவதற்கான வெள்ளை மணலுக்கென 50,000 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக்வும் பந்தல் நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

நல்லைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் தாகசாந்தி நிலையத்திற்கென வருடாவருடம் வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் பல அடியார்கள் நிதியுதவிகள், பொருளுதவிகள் செயவதாகவும் குறிப்பிட்ட நிர்வாக சபையினர், இம்முறையும் அவர்கள் உதவி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

பரம்பரை பரம்பரையாக அமைக்கப்பட்டுவரும் இந்த தண்ணீர்ப் பந்தல் தாகசாந்தி நிலையத்தை தற்போது நெடுந்தீவைச் சேர்ந்த சின்னத்துரை குமாரசாமி என்பவரும் அவருடைய உறவினர்களும் நடாததி வருகின்றனர்.

# நல்லூர் முருகனுக்கு இன்று 5 ஆம் திருவிழா



## வசந்தம் வீசுகின்றது

தெற்கிலிருந்து வசந்தம் வீசுகின்றது
எம்மதமும் சம்மதமோ? தமிழ்
தெய்வமே உனக்கு எத்தனை மொழி
தெரியும் மாற்று மொழி மதத்தினரை
மயக்கும் இறையருள் சிறக்கட்டும்
நாட்டில் சாந்தி சமாதானம் நிலைக்கட்டும்
நிரந்தர தீர்வுதர மனங்களை வென்றுவிடு.

கனகராசா நல்லூர்

## கந்தனைத் தொழுவோம் வாரீர்!

கவி, சார ஆடை கட்டி கந்தனைத் தொழுவோம் வாரீர்
காதலால் அவனருள் பெற்றிடுவோம் வாரீர்
உலாவரும் போதெல்லாம் ஒன்றிணைவோம் வாரீர்
ஒளிஞான வேலன் புகழ் ஓதுவோம் வாரீர்
நிலவிடும் துயரதை நிறுத்திட வேண்டுவோம் வாரீர்
நிரந்தர தீர்வினை பெற்றிட வேண்டுவோம் வாரீர்
அழகனவன் உற்சவம் கண்டிடுவோம் வாரீர்
அருளான தெய்வத்தின் ஆசிகள் பெறுவோம் வாரீர்

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

தத்துவத்தைக் காட்டித் தரிசிக்க வைத்தெமக்கு முத்திதரும் நல்லூர் முருகனே - இத்துணையுஞ் சச்சரவுக் கஞ்சிச் சலனப்பட்டோமினிமேல் அச்சமின்றி வாழ அருள். நல்லூர் கந்தன் பாமாலை


முருகனருள் பாடி நல்லருளைப் பெற்றிடுவோம்

ஆர்.வி.ஜி. மருந்தகம்

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துகள்
மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

504, ஆஸ்பத்திரி வீதி.
(O.P.T முன்பாக)
யாழ்ப்பாணம்.
021 222 2129

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
021 222 6806


# நல்லூர் ஆலய சூழலில் இன்று....

(நல்லூர்)

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு எஸ்.சுதாகரனின் பாட்டு இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக் வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கள் ஆர் சிவராமன், முகர்சிங் என். சதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

◆◆◆

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் நிகழ்வில் இன்று பிற்பகல் 3 மணிவரை நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும் என்னும் விடயம் பற்றி க.ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் ஆவரங்கால் அருள் முருகன் அறநெறிப் பாடசாலை, காரைநகர் புகழ் சிவசுப்பிரமணிய அறநெறிப் பாடசாலை, புத்தூர் ஈஸ்வரன் அற நெறிப் பாடசாலை மாணவர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

---

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தினையொட்டி நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் தெய்வீகப் பேருரையில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு அகில இலங்கை திருமுறை, பண்ணிசை அரங்க நிகழ்வு இடம்பெறவுள்ளது. இவ் இசையரங்க நிகழ்வில் செல்விகள் பவித்திரா குருபரன், பானுஜா குருபரன் கலந்து கொள்ளவுள்ளனர். (60)

பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும் போதுதான் தெரியும். - பிராங்கிளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## அலுவலகச் சூழலில் அன்னியோன்யம்

இனிமையான சக ஊழியர்களுடன் இணைந்து வேலை செய்யும் சூழலுக்காக ஊதியத்தில் சமரசம் செய்துகொள்ள எத்தனை பேர் தயாராயிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள உலக அளவில் ஒரு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

உலக அளவில் வேலை நிலவரம் எப்படி என்று ஆய்வு செய்யும் ரான்ட்ஸ்ரட் (randstad) நிறுவனம் 32 நாடுகளில் இந்தக் கருத்துக்கணிப்பை நடத்தியது. சம்பளத்தைவிட நல்லவர்களோடு சேர்ந்து வேலை செய்யும் சூழல்தான் பெரிது என்று நம்புபவர்கள் உலக அளவில் சராசரியாக 60 சதவீதம்தான். ஆனால், சீனா மற்றும் இந்தியாவில் 85 சதவீதத்துக்கு மேற்பட்டோர் நல்ல அலுவலகச் சூழலுக்காக சம்பளத்தை விட்டுக் கொடுக்கலாம் என்று சொல்லியுள்ளார்கள்.

இலங்கையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், இங்கும் ஒன்றாய் வேலை செய்கிறவர்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஊகிப்பது சிரமமல்ல. ஏனெனில், வளரும்–ஆசிய நாடுகளிலுள்ள அலுவலகச் சூழல் அத்தனை ஆரோக்கியமாக இல்லை என்பதுதான் காரணம். இந்த நாடுகளுக்குள்ளே ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும், பல்வேறு வகைகளில் வரலாற்று ரீதியான கலாசார ஒற்றுமை நீடிக்கிறது. ஒரே இடத்தில் பணி புரிபவர்களாக இருந்தாலும் ஒற்றுமையுணர்வு காணப்படாததும், போட்டி பொறாமைகள் அதிகமிருப்பதும் இந்த நாட்டு அலுவலகங்களின் பொதுத்தன்மையாக உள்ளது. எனவேதான் இங்கு பலருக்கு அலுவலகம் போவதை நினைத்தாலே எரிச்சலும் விரக்தியும் ஏற்படுவதாக இருக்கிறது.

ஊழியர்களிடையேயான அன்னியோன்யத்திற்கு இங்கு கவனம் எடுக்கப்படுவதில்லை. கைநிறைய சம்பளமும் ஏராளமான சலுகைகளும் வழங்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஊழியர்கள் தொடர்ந்து வேலை செய்யாமல் விலகுவதற்கு இதுவே காரணமாக முன்னைய ஆய்வுகளில் சொல்லப்பட்டது. அதைத் தொடர்ந்துதான் ஊழியர்களுக்கிடையே நட்பும் நல்லெண்ணமும் உருவாக வேண்டும் என்பதற்காக புதிய புதிய வாய்ப்புகளை உலகளவில் நிர்வாகங்கள் ஏற்படுத்திக் கொடுத்தன.

ஒவ்வொரு பிரிவிலும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுபவர்களும், அவர்களைக் கண்காணிப்பவர்களும் விதிகளைக் கொஞ்சமும் பிசகாமல் அமுல்படுத்தும் கண்கொத்திப் பாம்புகளாக இல்லாமல் ஊழியர்களின் உணர்வுகளைப் புரிந்து செயற்படும் மனிதவள நிர்வாகிகளாகச் செயற்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு அப்படி வந்ததுதான்.

பொறாமை, வெறுப்பு, போட்டுக் கொடுப்பது, கவிழ்க்க நினைப்பது, கோஷ்டி சேர்ப்பது என்று எப்போதும் கெட்ட எண்ணங்களுடன் நடமாடுபவர்கள் நான்கு பேர் இருந்தால் போதும், ஒரு சிறந்த அலுவலகத்தின் பணிச்சூழலை அடியோடு நாசமாக்கி விடலாம். அதனால் உற்பத்தித் தரமும் அளவும் சரிந்து நஷ்டத்தில் கொண்டுவிடும் என்று உணரப்பட்டிருக்கிறது.

கட்டுக் கோப்பான பெரிய பெரிய நிறுவனங்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் கடமையே பெரிதென்று உழைக்கும் ஊழியர்களைப் பார்க்க முடியாது. ஏனெனில், வாழ்க்கைக்காக வேலையே தவிர வேலைக்காக அல்ல வாழ்க்கை என்ற சித்தாந்தம் உலக நாடுகள் அனைத்திலும் எல்லா மனிதர்களுக்கும் பொதுவாக உள்ளதுதான்.

எனவே, ஊழியர்களிடையேயான ஒற்றுமையைப் பேணுவதிலும், மனக்கசப்புகளை அகற்றுவதிலும் உதவக்கூடிய மகிழ்நிறை திட்டங்களை நடைமுறைப்படுத்தியபடி இருப்பதும், பரஸ்பரம் அன்னியோன்யமும் மகிழ்ச்சியுமான பணிச்சூழலை உருவாக்குவதும்தான் எந்த நிறுவனத்தினதும் வெற்றியாக அமையும்.

- ஆசிரியர்

# வருடந்தோறும் விபத்துக்களினால் 12 ஆயிரம் பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் விபத்துச் சம்பவங்களின் மூலமாக வருடத்திற்கு 12,000 பேர் உயிரிழப்பதாக சுகாதர அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவற்றில் நூற்றுக்கு 22 வீதமான உயிரிழப்புக்கள் வாகன விபத்துச் சம்பவங்களின் மூலமாக நேர்வதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

விபத்துக்களின் மூலமாக உலகம் முழுவதிலும் 5.5 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்தத் தகவல்களை குறிப்பிட்டார்.

விபத்துச் சம்பவங்களை குறைத்துக் கொள்வதற்கு அதிகாரிகள், மக்கள் என அனைத்து தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## பிளாஸ்டிக் கூடை பயன்படுத்தாத நால்வருக்கு 24 ஆயிரம் அபராதம்

பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்தாது மரக்கறி கொண்டு சென்ற குற்றத்திற்காக நால்வருக்கு தலா ஆறாயிரம் ரூபா வீதம் 24 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்து நுவரெலிய நீதிமன்ற நீதவான் தீர்ப்பளித்தார்.

லொறிகளில் மரக்கறிகள் பிளாஸ்டிக் கூடைகள் இன்றி கொண்டு சென்ற 6 லொறிச் சாரதிகளுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

நுவரெலிய மாவட்ட செயலாளரின் வேண்டுகோளிற்கு இணங்க நுகர்வோர் சேவை அதிகார சபையின் நுவரெலியா காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள் பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது மரக்கறி கொண்டு செல்ல பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தாத இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

## சுற்றுலா உணவு ஒவ்வாமை 31 மாணவர்கள் மருத்துவமனையில்

மாத்தளை, லக்கல பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவர்கள் உணவு விசமான காரணத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

31 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் வேளையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹம்பொலை வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

நுவரெலியா பிரதேசத்திற்கு கல்விச் சுற்றுலா சென்றிருந்த நிலையில் உணவகம் ஒன்றில் உட்கொண்ட உணவு விசமானதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவன ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்க வேண்டிய சம்பள நிலுவையை வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 500 கொல்கலங்களில் அடைக்கப்பட்டுள்ள எண்ணெய்யை பங்கிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# போதையில் மிதப்பவர்களுக்கு இதுதான் நடக்கும்

(திருநெல்வேலி)

வீதியில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த இருவருக்கும், அனுமதிப்பத்திரம் இன்றி கள்ளு விற்பனையில் ஈடுபட்ட மூவருக்கும் யாழ்ப்பாணம் சிறுவர் நீதமன்றிலும், யாழ். நீதிவான் நீதிமன் றத்திலும் ஒருவார காலத்துக்கு சமூகசேவை செய்யுமாறு யாழ். நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் மதுபோதையில் தகாத வார்த்தைகளைப் பேசி அநாகரிகமாக நடந்து கொண்டதாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த 25.04.12 இல் கைது செய்யப்பட்டார். பின்னர் 30.04.12 இல் யாழ் நீதிமன்றில் சமூகமளிக்குமாறு தெரிவித்து பொலிஸார் இவரைப் பிணையில் விடுத்திருந்தனர். ஆனால் பின்னர் இவர் மன்றுக்கு சமூகமளிக்காமல் இருந்ததையடுத்து இவருக்குப் பிடியாணை நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸார் இவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். மல்லாகம் நீதிமன்று யாழ். நீதிமன்றுக்கு இவரைப் பாரப்படுத்தியது.

யாழ். நீதிமன்றில் இவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இவரை 10 ஆயிரம் ரூபாவுக்கான ஆள் பிணையிலும், யாழ்.சிறுவர் நீதிமன்றில் ஒரு வார காலத்துக்கு சமூக சேவை செய்யுமாறும் நீதவானால் உத்தரவிடப்பட்டது.

இதேமாதிரியான இன்னொரு வழக்கில் 25.07.12 இல் பிடிக்கப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த மற்றொருவருக்கும் இதே மாதிரியான தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ். மதுவரித் திணைக்களத்தினால் கோப்பாயிலும், கொக்குவில் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் அனுமதிப்பத்திரமின்றி கள்ளு விற்பனையில் ஈடுபட்ட மூவர் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவுக்கான ஆட்பிணையும், ஒருவார காலத்துக்கு யாழ்.நீதிமன்றில் சமூக சேவையில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்பட்டது. . (137)

# புலோலி மெதடிஸ்த பாடசாலைக்கு சொந்த மைதானம் இல்லை

(புலோலி)

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கென சொந்த மைதானம் இல்லை என பாடசாலைச் சமூகத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் தரம் - 01 தொடக்கம் க.பொ.த.சாதாரண தரம் வரை 172 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் விளையாட்டின் முக்கியத்துவம் மற்றும் திறமைகளை வளர்த்துக் கொள்வதில் வடமராட்சியில் இப்பாடசாலையே பின்னடைவாக திகழ்ந்துவரும் சமயம் பாரிய சிரமங்களையும் மாணவர்கள் சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.


வருடா வருடம் நடைபெறும் இல்லமெய்வல்லுநர் போட்டிகளை நடத்துவதாக இருந்தால் பாடசாலையின் முன்பக்கமாக உள்ள தனியார் தோட்டக் காணியிலே காலபோக பயிர்களைச் செய்யாத காலத்திலே காத்திருந்து நடத்தவேண்டியுள்ளது. குறித்த காலத்துக்குள் நடத்தப்படாமையினால் அடுத்த பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளிலும் போதிய பயிற்சி இல்லாமையால் தோல்விகளை சந்தித்து வருவதுடன் மாணவர்கள் உள்ளக் குமுறல்களுடன் மனவிரக்தியடைந்தும் வருகின்றனர்.

அத்துடன் இப்பாடசாலையில் கல்விகற்ற மகேந்திரம் மதுஷன் என்ற மாணவன் இச்சோதனைகளை சாதனைகளாக கருதி 2010 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் 400 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் இவர் வெற்றியை நிலைநாட்டிக் கொள்ளவே அல்லது மேன்மேலும் தனது விளையாட்டின் திறமையை வெளிக்கொனருவதற்கு பாடசாலையில் மைதானம் இல்லாததே காரணமாக அமைந்தது.

இவர் போன்ற மாணவர்கள் தமது திறமைகளை தமக்குள்ளே வைத்துக் கொள்வதுடன் உடல், உள ஆரோக்கியத்தையும் வளர்த்துக் கொள்வதில் பாரிய சிரமங்களையும் எதிர் கொண்டு வருவதாகவும் இதனால் இப்பாடசாலைக் கல்வியோடு இணைந்த விளையாட்டிலும் பின்னடைவை சந்தித்துள்ளதுடன் எமது கிராமமே பின்தள்ளப்படுமோ என்ற அச்சத்தில் உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தரப்பினர் மைதானத்துக்குரிய காணியை கொள்வனவு செய்து தரும்படி அவர்கள் மேலும் கேட்டுள்ளனர்.

- நொயல் நடேசன், அவுஸ்ரேலியா

**நான் அவரிடம், "நீங்கள் கூட்டமைப்பில் இருந்திருந்தால். இப்படியான வேலைகள் செய்யாமல், சில அறிக்கைகளை விட்டுவிட்டு, வெளிநாட்டு வானொலிகளுக்கு பேட்டி கொடுப்பதோடு உங்கள் சோலி முடிந்திருக்குமே" என்று கேட்டபோது அவர் சிரித்தார் அந்தச் சிரிப்பில் அப்பழுக்கற்ற கிராமியத் தன்மை தெரிந்தது.**



வட்டுவாய்க்கால் வன்னிப் பிரதேசத்துடன் முல்லைத் தீவை, இணைக்கும் பிரதேசம். பற்றைக்காடான இந்த மணல்ப்பாங்குப் பிரதேசம், மனித உயிர்களை மொழி, மதத்துக்கு அப்பால் காவு கொண்டிருக்கிறது.

சில கவிஞர்களும் எழுத்தாளர்களும் சொல்வது போல் 2009இல் மட்டும் இந்தப் பிரதேசத்தில் இரத்தம் சிந்தப்படவில்லை. இந்த மண் குருதியால் முன்பும் சேறாக்கப்பட்டிருக்கிறது. சிங்கள இரத்தம் என்றாலும் அது சிவப்பு நிறமானதுதான். அந்த இளைஞர்களும் சம்பளத்துக்காக தமது குடும்பங்களைப் பராமரிக்கத்தான் ஆயுதம் ஏந்தினார்கள். அவர்கள் விடயத்திலும் ஜெனிவா ஒப்பந்தம் கவனிக்கப்பட வேண்டும்.

இங்கும் துணுக்காயிலும் கிட்டத்தட்ட 3000 பேருக்கு மேற்பட்ட தமிழர்கள், பின்பு காணாமல் போய் விட்டார்கள். இவர்கள் ஆவியாக போயிருக்க முடியாது. புலிகளினால் கொல்லப்பட்ட இவர்களது இரத்தம் அந்த மண்ணை சேறாக்காதா எனது அருமைக் கவிஞர்களே? உங்கள் பார்வையில் துரோகிகளின் இரத்தம் திரவமில்லையா? இவர்களின் குருதி உறைந்து கட்டியாகி திண்ம நிலையானதா?


இதை விடப் பாரதூரமான விடயம் போரின் இறுதிநேரத்தில், இறுதிக்காலத்தில் சிறையில் இருந்த இராணுவத்தினர் பலர் (அதில் சிலர் கப்டன் தரத்தில்இருந்தார்கள்) புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இதில் எங்கே யுத்த தர்மம் கடைப்பிடிக்கப்பட்டது?அவர்கள் உயிருடன் ஒப்படைக்கப்பட்டிருந்தால் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் இன்னும் பலர் தமிழினி போன்று உயிர் பிழைத்திருக்க சாத்தியம் உண்டல்லவா.

வன்முறையின் வெளிப்பாடு போர் என்பது எவருக்கும் தெரியும். ஆனால் காலம் காலமாக போருக்கு விதிமுறைகள் இருக்கின்றன. தார்மீகம், சத்தியம் என்பன அங்கு இருக்க வேண்டும். இதற்கு நாங்கள் மேற்கு நாடுகளுக்கோ ஜெனிவாவிற்கோ போகத் தேவையில்லை. பாரதம்,இராமாயணம் என்ற எங்கள் செவ்விலக்கியங்களில் எங்கும் நிரம்பி இருக்கிறது. போர் தர்மம் ஒருசாராரிடம் மட்டும் இருக்க வேண்டும் என்பது எப்படி நியாயமாகும்? வன்முறையில் ஈடுபடுபவர்கள் அதிகாரத்தில் இருக்கும் போது தர்மத்தை பற்றி நினைப்பதில்லை. தோல்வியில் முடியும்போது யுத்த தர்மத்தையும் ஜெனிவா போர்முறையையும் பேசுவது பிரயோசனம் அற்றது.

சரித்திரத்தை மட்டும் சொல்லிவிட்டு நான் போகத் த்யாரில்லை. தற்போது நான் பார்த்த நிலையையும் கோடிகாட்ட விரும்புகிறேன்

இதற்கு முன்பு முல்லைத்தீவுக்கு நான் சென்றதில்லை. ஆனால் ஏனைய கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம் மற்றும் பொலநறுவை முதலான இலங்கையின் வரட்சியான பகுதிகளுக்கு பிரயாணம் செய்திருக்கிறேன். நான் கடந்த ஜூன் மாத நடுப்பகுதியில் இலங்கை சென்றபோது கடைசியாக சண்டை நடந்த சுமார் 10 கிராம சேவகர்கள் பிரிவுகளில் மக்கள் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் இன்னும் குடியேறவில்லை என்ற தகவல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரால் சொல்லப்பட்டது.

நான் வாகனத்தில் சென்ற போது ஒரு ஐரோப்பியப் பெண் ஒரு கண்ணி வெடியை செயலிழக்கப் பண்ணியதைப் பார்த்தேன். இந்த இடங்களில் பல சண்டைக்கு முந்தியகாலத்தில் ஆயுத கிடங்குகளாக பயன்படுத்தப் பட்டதால் பாதுகாப்பிற்காக கண்ணி வெடி புதைக்கப்பட்டிருந்தவை. சமாதான காலத்திலே சாதாரணமானவர்கள் அங்கு செல்வது தடுக்கப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகள் கிளிநொச்சியில் இருந்தபோதும் முல்லைத்தீவுதான் அவர்களின் கேந்திரமுக்கியத்துவம் பெற்ற பிதேசமாக இருந்தது. இங்கு ஆயுதக் கிடங்குகள் கடற்படைத் தளங்கள், பயிற்சித்தளங்கள் என்பன இருந்தன.



**இந்த 60 வருட கதையில் இருந்து என்ன புரிந்து கொண்டோம்? என்ன பாடத்தை கற்றுக் கொண்டோம்? இலங்கையில் நடந்த விடயங்களுக்கு யார் பொறுப்பு என பார்த்தால், தண்டிக்க நினைத்தால் இரண்டு பக்கத்திலிருந்தும் எவரும் தப்ப இயலாது. தமிழ் தரப்பினரும் சிலுவை சுமக்க வேண்டியிருக்கும்.**

யுத்தம் நடந்து 3வருடங்களில் பத்து தடவைக்கு மேல் இலங்கை சென்றாலும், முல்லைத்தீவுக்குச் செல்ல சமீபத்தில்தான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தப் பயணத்தில், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்வண்டியில் பரந்தனில் இருந்து சென்றேன். கிளிநெச்சியை அண்டிய பிரதேசங்கள் நெல் விதைக்கப்பட்டு விவசாயம் செய்யப்படிருந்தது. மக்கள் தங்களது சோலிகளை கவனிக்கச் சென்றார்கள். அந்த பஸ் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஆசிரியர்களால் நிறைந்திருந்தது.

பஸ் பயணத்தில், எதிர்நோக்கிய அசௌகரியம் காற்றில் வரும் புழுதி மூக்குக்கண்ணாடியில் படிவதுதான். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சுவாரஸ்யத்தையும் சொல்ல விரும்புகின்றேன். அக்காலத்தில் விடுதலைப்புலிகளின் அவுஸ்ரேலிய பொறுப்பாளர் தில்லை ஜெயக்குமாரிடம் "எங்கே கனகாலம் காணவில்லை" என்று கேட்டால், "மண்ணுக்கு போய் வந்த தாகச்" சொல்வார். அவர் இந்த புழுதியைத்தான் சொன்னாரா என நினைக்கிறேன்.

இதே நேரத்தில் பத்மநாபா, "தாங்கள் மக்களைத்தான் நேசிக்கிறேம். மண்ணையல்ல" என இந்தியாவில் கூறியதும் நினைவுக்கு வந்தது.

புதுக்குடியிருப்பு சந்தியில் முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் கனகரத்தினம் எங்களை சந்தித்து தனது ஜீப்பில் ஏற்றிக் கொண்டு சென்ற போது வழியெங்கும் சண்டையின் தழும்புகள் தெரிந்தன. உடைந்த கட்டடங்களின் சுவர்கள் தலையற்ற தென்னை மரங்கள் யுத்தத்தின் அகோரத்தை பறைசாற்றின. முன்னாள் அங்கத்தவர் எம்முடன் வரும் போது பலருடன் கலந்துரையாடி சில பணிகளில் ஈடுபட்டார்

நான் அவரிடம், "நீங்கள் கூட்டமைப்பில் இருந்திருந்தால். இப்படியான வேலைகள் செய்யாமல், சிலஅறிக்கைகளை விட்டுவிட்டு, வெளிநாட்டு வானொலிகளுக்கு பேட்டி கொடுப்பதோடு உங்கள் சோலி முடிந்திருக்குமே" என்று கேட்டபோது அவர் சிரித்தார்

அந்தச் சிரிப்பில் அப்பழுக்கற்ற கிராமியத் தன்மை தெரிந்தது.

"நான் நேற்று மணலாறு சென்றேன். அங்கும் மக்கள் துன்பப்படுகிறர்கள். அங்கு இடம் பெயர்ந்தவர்களைப் பார்த்தபோது மனக்கஷ்டமாக இருக்கிறது" என்று அவர் சொன்னபோது மொழிபேதமற்ற அரசியல் வாதியாகத் தெரிந்தார். ஆனால் எமது சமூகம் அப்படியானவர்களை கண்டு கொள்வதில்லை.

கடற்புலித்தளபதி சூசையின் வீடு இப்பொழுது சுற்றுலா இடமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு வருபவர்களுக்காக பல கடைகளை இராணுவத்தினர் திறந்துள்ளனர். அங்கிருந்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனது வீட்டை நோக்கிச் சென்றேன். அது ஒரு இராணுவ கோட்டை போல் காட்டுக்குள் இருந்தது. நிலத்துக்குக் கீழ் நாலு தளங்களுடன் இரும்புக் கதவுகள் கொண்ட வீடு.

ஒரு விதத்தில் மனிசன் பாவம். தன்ர உயிரைப் பற்றி எவ்வளவு கவலைப்பட்டிருந்தார் என்பது அந்த அரண்கள் நிறைந்த வீட்டைப் பார்த்தால் விளங்கும். அதே நேரத்தில் மற்றவர்கள் உயிருக்கு எந்த மதிப்பும் கொடுக்காமல் இருந்திருக்கிறார் என்பது ஆத்திரத்தைத் தருகிறது. தனது தலைமயிரையும் மீசையையும் கரும் சாயம் அடித்து காப்பாற்றிக் கொண்டிருந்தார் என்பது அவரது கடைசி போட்டோவை பார்த்தால் தெரியும்.

"அடப்பாவி உன்ர மசிருக்கு இவ்வளவு கவனம் எடுத்திருக்கிறாய். அந்த மூன்று இலட்சம் மக்களுக்கு அந்த மரியாதை கூட கொடுக்கவில்லையே" என நினைக்க வைத்தது.

ஏராளமான சிங்கள மக்களை அங்கு கண்டேன். முன்பு வடமாகாணத்தில் மடுவிலும் நயினாதீவிலும் மட்டும்தான் சிங்கள மக்களை சந்திக்க முடியும்.

ஒரு விதத்தில் இலங்கையை ஒரு நாடாக இணைத்த பெருமை பராக்கிரமபாகு மன்னனுக்குப் பின்பு பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும்தான் சாரும்.

தமிழ் தலைவர்கள் பிள்ளையார் பிடிக்க குரங்காகின கதைதான் தொடர்ந்து அரங்கேறுகிறது.

இதுவெல்லாம் நடந்த கதை.

இந்த 60 வருட கதையில் இருந்து என்ன புரிந்து கொண்டோம்? என்ன பாடத்தை கற்றுக் கொண்டோம்?

இலங்கையில் நடந்த விடயங்களுக்கு யார் பொறுப்பு என பார்த்தால், தண்டிக்க நினைத்தால் இரண்டு பக்கத்திலிருந்தும் எவரும் தப்ப இயலாது.

(17ஆம் பக்கம் பார்க்க)



# அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

# சட்டவிரோத ஆயுத பாவனையை கட்டுப்படுத்துமாறு பவ்ரல் கோரிக்கை

PAFFREL

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் சட்ட விரோத ஆயுத குழுக்களினால் ஆயுதங்கள் பயன் படுத்தப்படு வதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்க கோனிடம் தேர்தல் கண் காணிப்பு அமைப்பான பவ்ரல், எழுத்து மூலம் கோரியுள்ளது.

இம்முறை அரசியல்வாதி களுடன் கிரிமினல் சக்திகள் இணைவதற்கான சாத்தியமுள்ள தாக பவ்ரல் அமைப்பின் நிறை வேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள் ளார்.

இதனால் நிலைமை கட்டுக் கடங்காமல் செல்வதற்கு முன் னர் இவ்விடயம் குறித்து கவ னம் செலுத்தி, நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் தான் கோரியதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிரிமினல் வரலாற்றைக் கொண்ட நபர்கள் தமக்கு அரசியல் பாது காப்பை பெறுவதற்காக இத் தேர்தலில் அரசியல்வாதிக ளுக்கு ஆதரவு வழங்க முன் வரக்கூடும். அரசியல்வாதிகள் தமது எதிரிகளை ஒடுக்குவதற் காக இச்சக்திகளின் ஆதரவை பெற முயலக்கூடும். இவ்வா றான நிலையில் சட்டவிரோத ஆயு தங்கள் சம்பந்தப்பட்ட வன் முறைகளில் பயன்படுத்தப்படக் கூடும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல்களின்போது கொலை கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த உள் ளூராட்சி தேர்தலின்போது பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர சுட்டுக் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# விரிவுரையாளர்கள் கோரினால் பிரச்சினையில் தலையிடத்தயார்



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தம்மிடம் வேண்டுகோள் விடுப்பார்களாயின் அவர்களது பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு தலையீடு செய்வ தாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

எனினும் இதுவரை தம்மிடம் பல்கலைக்கழக விரிவுரையா ளர்கள் எந்தவொரு வேண்டுகோளையும் முன்வைக்கவில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

விரும்பும் எந்தவொரு தரப்பினரும் தலையீடு செய்து தமது பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும் என சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி ர்ஞ்சித் தேவசிறி கூறியுள்ளார்.

# உயர்தரப்பரீட்சைகள் பிற்போடப்பட மாட்டாது



(கொழும்பு)

2012ஆம் ஆண்டிற்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளை பிற்போடும் எண் ணம் இல்லை என பரீட்சைகள் ஆணையா ளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜெ. புஸ்ப குமார தெரிவித்துள்ளார்.

கடந்தவருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், இசெட் புள்ளி தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ள நிலையில் இவ்வாண்டிற்கான பரீட்சைகள் பிற்போடப்படலாம் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த தகவலின் உண்மைநிலை பற்றி கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் ஆண்டிற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# கூட்டமைப்பின் 4 உறுப்பினர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

துஷ்பிரயோகம் மற்றும் குற் றச் செயல்கள் தொடர்பான குற் றச்சாட்டுக்களுக்கு இலக்காகி யுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நான்கு உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி அங்கத்துவத்திலிருந்தும் அவர்கள் வகித்த பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின் பொதுச் செயலா ளர், அமைச்சர் சசில் பிறேம ஜயந்தவினால் இந்த நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய தங்காலை பிர தேச சபையின் தலைவர் டபிள்யூ, சம்பத் சந்திரபுஸ்ப, தங்காலை நகர சபையின் உறுப் பினர் அஞ்ஜன குசும் ருவன், அக்குரஸ்ஸ பிரதேச சபையின் தலைவர் எஸ்.எச்.சுனில் மற்றும் அக்குரஸ்ஸ பிரதேச சபையின் உப தலைவர் முனிதாஸ கமகே ஆகியோர் அங்கத்துவத்திலிருந் தும் நீக்கப்பட்டுள்ளனர்.



அத்தோடு குறித்த நால்வரும் பதவி விலக்கப்பட்டுள்ளமை தொடர்பாக உள்ளூராட்சி மன் றங்களின் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளதாக அந்த அறிக் கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# ஆபத்தான நாடு அமெரிக்கா



(கொழும்பு)

உலகின் மிக்வும் ஆபத்தான நாடு அமெரிக்காவே என வீட மைப்பு பொது வசதிகள் அமைச் சர் விமல் வீரவன்ச தெரிவித் துள்ளார்.

கியூபாவின் சர்வதேச ஆதரவு தினத்தை முன்னிட்டு கொழும் பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். உலகில் மிக வும் பாதுகாப்பற்ற நாடாக அமெரிக்க விளங்குகிறது. அமெரிக்க மக்கள் பாதுகாப்பற்ற மனோ நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாகவே கியூப தேசப்பற்றாளர்களை அமெரிக்கா தீவிரவாத முத்திரைகுத்தி கைது செய்துள்ளதாகஅவர் தெரிவித் துள்ளார்.

# இலங்கைக்கு வரவுள்ளார் பாக்.வெளிவிவகார அமைச்சர்



(கொழும்பு)

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச் சர் ஹினா ரபானி கஹார் இலங் கைக்கு விஜயம் செய்யஉள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி முதல் 3ஆம் திகதி வரையில் ரபானி கஹார் இலங்கையில் தங்கி யிருப்பார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட நாட்டின் முக் கியஸ்தர்கள் பலரை ரபானி கஹார் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதா கக்குறிப்பிடப்படுகிறது.

இலங்கைக்கான பாகிஸ் தான் உயர்ஸ்தானிகராலயம் இந்தத் தகவல்களை தெரி வித்துள்ளது.

அரசியல், பாதுகாப்பு, கலாச்சாரம், ஊடகம், சுற்று லாத்துறை,வர்த்தக உறவு களை வலுப்படுத்திக் கொள் வது தொடர்பில் பேச்சுவார் த்தை நடத்தப்பட உள்ளதா கக்குறிப்பிடப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடை யில் தற்போது நிலவி வரும் உறவுகளை மேலும் வலுப் படுத்திக்கொள்ளும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளன.

1948ம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜ தந்திர உறவுகள் பேணப்பட்டு வருவது. குறிப்பிடத்தக்கது.

# நீர் மின் உற்பத்தி 20வீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

நிலவும் வரட்சி காரணமாக தற்போது நீர் மின் உற்பத்தி 20 வீதம் வரை குறைவடைந் துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

இந்த நிலையில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் வரை நீர் மின் உற்பத்தி நடவடிக்கைகளை உரிய முகாமைத்துவத்துடன் மேற் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டமைப்பை நிலையாக பேணுவதற்கு நீர் மின் உற் பத்தியின் பங்களிப்பு மிகவும் அவசியம் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்த கெரவலப் பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்க முடியும் எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# பெற்றோலிய வள சட்டங்களில் திருத்தம்

(கொழும்பு)

பெற்றோலிய வளம் தொடர்பான இரண்டு சட்டங்களில் திருத்தம் மேற் கொள்வதற்கு பெற்றோலிய வளத் துறை அமைச்சு உத்தேசித்துள்ளது.

குறித்த இரண்டு சட்ட திருத்தங் களும் சட்ட மாஅதிபரின் அனுமதியைப் பெறும் வகையில் தற்போது சமர்ப்பிக் கப்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலா ளர் ஏ.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

சட்ட மாஅதிபரின் அனுமதி கிடைத்தவுடன் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக அவை சமர்ப்பிக்கப் படவுள்ளது.

இந்த சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெற் றோலிய நெறிப்படுத்தல் நடவடிக்கைகள் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தும் மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு ஆராயவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# களப்பில் நீராடிய இருவரை காணவில்லை

(கொழும்பு)

மூதூர் கொட்டியாரக்குடாக் கடல் களப்பில் மூழ்கிய இரண்டு பேரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இவர்களுடன் நிரில் மூழ்கிய மேலும் ஒருவரது சடலம் ஏற் கனவே மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 அளவில் குறித்த மூவரும் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது ஏற்பட்ட நீர்ச்சுழியில் அகப்பட்டு நீரில் மூழ்கியுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது உயிரிழந்த 30 வயதான ஒருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கி காணாமற்போன ஏனைய இருவரையும் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்ச கர் அஜித் ரோஹன குறிப்பிட் டார்.

# நாடு கடத்தப்பட்டவர் விசாரணைகளின் பின் விடுதலை

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட இலங்கையர் பல மணிநேர விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் குறித்த இலங்கையர் நாடுகடத்தப்பட்டார். ஐக்கிய நாடுகள் சபையின் இறுதிநேர தலையீட்டையும் நிராகரித்து இந்த நாடுகடத்தலை அவுஸ்ரேலிய அதிகாரிகள் மேற்கொண்டனர் எனத்தெரிவிக் கப்படுகிறது. இதேவேளை இலங்கையர்களும் இருக்கலாம் என்று நம் பப்படும் 52 பேரைக்கொண்ட படகு ஒன்று அவுஸ்ரேலியா வைச் சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

# வேலணைப்பிரதேசத்தின் விவசாயம் குறித்து ஆராய்வு

(தீவகம்)

வேலணைப் பிரதேசத்தின் விவசாய அபிவிருத்தி தொடர்பாகவும், கால்நடைகளை கட்டுப்படுத்தல் தொடர்பாகவும் ஆராயும் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை வேலணைப பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் விவசாய நிலங்களை விதைப்புச் செய்வதற்கு ஏதுவாக கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது பெரும பிரச்சினையாக உள்ளது என விவசாய கமலநல சங்கங்களின் தலைவர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.




அத்துடன் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் முகமாக விவசாயிகளுக்கு மானிய உரம் வங்கிகளூடாக ஊக்குவிப்புக் கடன், கடற்தொழிலாளர்களுக்கான மானிய மண்ணெண்ணெய என்பன வழங்குவது தொடர்பாக உரியவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதுபற்றி வேலணைப்பிரதேசசபையின் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசா இன்னும் ஒரிரு மாதங்களுக்குள் கட்டாக்காலிகளை பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

வேலணைப்பிரதேச கால்நடை அதிகாரி கூறுகையில் மண்டைதீவு தொடக்கம் புங்குடுதீவு, ஊர்காவற்றுறை வரை 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் திரிகின்றன. இதனை பிடிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தவுடன் அனுமதி வழங்குவதாக தெரிவித்தார்.

கமலநல உத்தியோகத்தர் கூறுகையில் பெருமளவு காணிகள் விதைப்புக்குட்படாமல் இருக கின்றன. கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தும் பட்சத்தில் அனைத்து காணிகளிலும் நெல்விதைப்பை மேற்கொள்ளலாம். அத்துடன் பாய்ச்சல், குளங்களை புனரமைப்பு செய்யவேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் ஊடுபயிர்ச் செய்கையை ஊக்கப்படுத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (85)

# ரமழான் சிந்தனை



*உங்களிடம் ஒரு மாதம் வந்திருக்கின்றது அதில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு இருக்கின்றது. எந்த மனிதர் அவ்விரவின் நன்மைகளை இழந்து விடுகின்றாரோ அவர் நன்மைகள் அனைத்தையும் இழந்தவராவார் துர்ப்பாக்கிய முடையவரைத் தவிர வேறு எவரும் அவ்விரவின் நன்மையை இழந்து விடமாட்டார் என ரஸூல் (ஸல்) கூறியுள்ளார்கள்.*

நூல் - இப்னுமாஜா (105)

# வைத்திய சாலையில் தொண்டர் சேவை


(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ்.கிளையினர் எட்டு தொண்டர் பணியாளர்களை வழங்கியிருப்பதாக அவ் வைத்தியசாலையின் தலைமை மேற்பார்வையாளர் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திய சாலையின் சிற்றூழியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நீடித்து வருவதன் காரணமாக வைத்தியசாலையினர் சுமார் 15 வரையான தொண்டர் பணியாளர்களை வழங்குமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரைக் கோரியிருந்தனர்.

இதனை அடுத்தே இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ்.கிளையினர் 8 தொண்டர் பணியாளர்களை வழங்கியுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

# பரமர் சங்கமம்



"நம்ப நட நம்பி நடவாதை" இதுவொரு திரிபுவாதக்கருத்தைக் கூறும் பழமொழி. பத்திரிகை, ஊடகங்கள் மட்டிலும் இந்த நிலைமைதான் பரவலாகக் காணப்படுகிறது.

சமீபத்தில் பளை, பச்சிலைப் பள்ளிப்பிரதேசத்தில் சிறுவன் ஒருவன் ஹன்ரர் வாகனமொன்றில் நசியுண்டு பலியான சம்பவத்தைப் பத்திரிகைகள் பலவாறாகத் திரித்துக் கூறின.

ஒரு பத்திரிகை சொந்தத் தகப்பனாரது வாகனத்தில் நசிந்தே சிறுவன் பலியாகினதாகவும்; இன்னொன்று வேறொரு சாரதி சிறுவனின் தகப்பனாருக்கு தாயாரினால் வழங்கப்பட்ட உணவுப் பாசலை வாங்கிச் செல்லும் சம்பவத்தின் போதே அந்நிகழ்வு ஏற்பட்டதாகவும் தெரிவித்து இருந்தது.

இந்தத் தகவல் மட்டுமல்லாமல் வேறு பல தகவல்களும் ஒரு பத்திரிகை ஒருவிதமாகச் செய்திகளைப் பிரசுரித்து வந்துள்ளன. கொல்லப்பட்ட, விபத்தில் பலியானவர்களின் பெயர்களும் ஒவ்வொரு பத்திரிகையில் ஒவ்வொரு மாறுபட்ட பெயர்களில் சுட்டப்பட்டு பிரசுரமாகி வருவதையும் காணலாம்.

குடாநாட்டில் தற்சமயம் ஐந்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றில் பெரும்பாலும் ஒரு நிகழ்வைச் சரியாகச் சித்தரிப்பது இரண்டு பத்திரிகைகளாக இருக்கும்.

மற்றவை மூன்றும் வெவ்வெறு விதமாகச் செய்திகளைத் திரித்துக் கூறுவதைக் கவனிக்கலாம். அதாவது ஒரே செய்தியாளர் இரண்டு பத்திரிகைகளுக்கும் செய்தி வழங்குபவராக இருப்பார்.

ஏனையவை தனித்தனியான வெவ்வேறு செய்தியாளர்கள் வழங்குவதால் ஒன்று போல செய்திகள் இருந்துவிடுவதில்லை. இதற்கான காரணமென்ன?

சம்பவங்கள் நடைபெறும் போதில் செய்தியாளர்கள் அவ்விடத்தில் பிரசன்னமாக இருப்பதில்லை; பின்பாகவே அங்கே செல்கிறார். அல்லது பிரதான வைத்திய சாலைக்குச் செல்கிறார்.

உறவினர்கள், சம்பவத்தை நேரில் கண்டவர் அல்லது இன்னுமொரு கேட்டறிந்தவரிடம் இருந்தே நடைபெற்ற சம்பவம் , பெயர், விபரங்களை கேட்டறிந்து தகவலைச் செய்தியாக்க நேர்கிறது.

பதட்டத்தில் இருக்கும் உறவினர்கள் மற்றும் நேரில் கண்டவர் அதற்கு அப்பால் நிகழ்வைக் கேட்டறிந்தவரிடம் இருந்தே தகவல்களைப் பெற்று செய்தியாக்க வேண்டி ஏற்படுகிறது.

இந்நிலையில் ஒருவருக்கு ஒருவர் மாறுபடத் தெரிவிக்கும் சம்பவ நிகழ்வு, பாதிக்கப்பட்டவரின் பெயர்களே செய்திகளாகின்றன. இதனாலேயே மாறுபட்ட தகவல்களை வழங்கும் செய்திகளாக மறுநாள் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

இதற்கு இன்னொரு அடிப்படைச் செய்தியை முந்திக்கொண்டு சில மணிநேரங்களில் வெளிவரும் மறுநாள் பத்திரிகையில் பிரசுரித்து விட வேண்டுமென்ற அவசரம். ஆறுதலாக ஆராய்ந்து செய்திகள் எழுதப்படுவதில்லை.

ஏதோ ஒரு வகையில் தகவலைப் பெற்றுக் கொள்கின்றோம். ஆனால் 'நம்ப நட நம்பி நடவாதை' எண்ட மாதிரி நூற்றுக்கு நூறு தகவலைச் சரியாகப் பெறமுடிவதில்லை எண்டதும் உண்மைதான் இல்லையே பின்ன....

# புள்ளிப் பகுப்பாய்வினை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையின் போது உயர்த்தும் வகையில் நடாத்தப்பட்டு வரும் விசேட செயற்றிட்டத்திற்கு அமைய கடந்த 25.07.2012 நடாத தப்பட்ட இரசாயனவியல் மதிப்பீட்டுப் பரீட்சையின் புள்ளிப் பகுப்பாய்வினை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் 10 ஆம், 11 ஆம் தர விஞ்ஞான இரசாயனவியல் பாட அலகுகளை உள்ளடக்கி நடாத்தப்பட்ட மேற்படி இரண்டாம் மதிப்பீட்டின் புள்ளிப்பகுப்பாய்வுப் படிவத்தினை ஆங்கில மொழி மூலம் தோற்றிய மாணவர்களுக்கும் தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களுக்கும் தனித்தனியாக அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (03)

# இரதோற்சவம்

(திருநெல்வேலி)

அல்வாய் - வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளைஞாயிற்றுக் கிழமை வசந்தோற்சவமும், நாளை மறுதினம் திங்கட்கிழமை சப்பரத்திரு விழாவும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

31 ஆம் திகதி நடைபெறும் தேர்த்திருவிழா நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். அன்றைய தினம் தேர்த் திருவிழா நேர்முக வர்ணனையை வர்ணனைக் கலாநிதி மதுர கவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார். (60)

# முரசின் இன்றைய பலன்

(28.07.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 13 ஆம் திகதி. தசமி முன்னிரவு 07.26 வரை. நட்சத்திரம் அனுசம். பின்னிரவு 4.07 வரை சித்தயோகம்.
இராகுகாலம் 9.03 - 10.33 வரை. சுபநேரம் 3.03- 4.33 வரை.
எமகண்டம் 1.33 - 3.03 வரை. குளிகன் காலம் 6.03 - 7.33 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சந்திராட்டமம் கவனம் தேவை, உடலில் தளர்ச்சி, மனச்சஞ்சலம், குடும்பத்தில் நலம். |
| ரிஷபம் | முயற்சி, மருத்துவச் செலவுகள், பிரச்சினைகள் தீரும், வீண்பழி கேட்க நேரிடும். |
| மிதுனம் | கூட்டு முயற்சி இலாபம், விரோதப் போக்குகளைத தவிர்க்கவும், எதிர்பாராத விரயம், நண்பர் உதவி. |
| கடகம் | பாராட்டு, குடும்பத்துடன் பயணம், சுபகாரியங்கள், தேவையற்ற வாக்குவாதம். |
| சிம்மம் | ஆதாயம், உடல் ஆரோக்கியம், கல்வியில் சாதனை, திருமண வாய்ப்பு. |
| கன்னி | கீர்த்தி, புத்திரரால் மகிழ்ச்சி, உறவினர்கள் அனுசரணை, சிந்தித்து செயல்படவும். |
| துலாம் | ஞாபக மறதி, மன உழைச்சல், வேலைவாய்ப்பு கிட்டும், சிந்தித்து முதலீடு செய்யவும். |
| விருச்சிகம் | பகட்டு வாழ்க்கை, உடலில் சோர்வு, கனவுத் தொல்லைகள், சுபகா்ரியத்தடை. |
| தனுசு | புத்தி மேன்மை, எதிர்பாராத பயண இலாபம், பணப்பரிமாற்றத்தில் கவனம், எதிர் நீச்சல். |
| மகரம் | தொழில் விருத்தி, எதிர்பாராத இடமாற்றம், வேலை வாய்ப்புக் கிட்டும், உடல் நலக்குறைவு. |
| கும்பம் | கழன உழைப்பு, பணவரவில் சிக்கல், சொத்துக்களால் அனுகூலம், சிக்கனம் வேண்டும். |
| மீனம் | சுபகாரியம், ஆரோக்கியத்தில் கவனம், இரவல வாங்குவதைத் தவிர்க்கவும், மனஸ்தாபம். |

# கொடி மாறியதால் பதற்றம் வட கொரியா எதிர்ப்பு

(லண்டன்)

ஒலிம்பிக் மகளிர் கால்பந்து போட்டியில், வட கொரிய அணி நேற்று முன்தினம் கம்போடியா அணியுடன் மோதியது. போட்டி தொடங்குவதற்கு முன்பாக வட கொரிய வீராங்கனைகள் கிளாஸ்கோ, ஹாம்ப்டன் பார்க் மைதானத்தில் பயிற்சி செய்தனர். அப்போது, மைதானத்தில் இருந்த இராட்சத திரையில் தென் கொரிய தேசியக் கொடியை காண்பித்ததால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வட கொரிய வீராங்கனைகள் உடனடியாக மைதானத்தை விட்டு வெளி-யேறியதுடன் போட்டியில் விளையாட முடியாது என்றும் மறுத்துவிட்டனர். இந்த பிரச்சினையில் உடனடியாக தலையிட்ட ஒலிம்பிக் நிர்வாகிகள், கொடியை மாற்றிக் காண்பிக்க ஏற்பாடு செய்ததுடன் இந்த தவறுக்காக வட கொரிய அணியினரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டன. இதனால், ஒரு மணி நேர தாமதத்துக்குப் பிறகே போட்டி தொடங்கியது. இந்த போட்டியில் வட கொரியா 2,0 என்ற கோல் கணக்கில் கம்போடியாவை வீழ்த்தியது.



# இனவெறிச் செய்தியால் ஒலிம்பிக்கிலிருந்து நீக்கம்

(லண்டன்)

டுவிட்டர் இணையத்தளத்தில் இனவெறியை தூண்டும் வகையில் செய்தி வெளியிட்ட கிரீஸ் வீராங்கனை, ஒலிம்பிக் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்.

கிரீஸ் நாட்டின் டிரிபிள் ஜம்ப் வீராங்கனை பராஸ்கெவி பபாகிறிஸ்டோ, 23. தற்போது லண்டனில் உள்ள கிரீஸ் அணியில் இடம் பெற்றுள்ளார். கிரீசில் தற்போது பரவி வரும் வைரஸ் காயச்சலில் ஒருவர் பலியானார். ஐந்து பேர் வைத்தியசாலையில் உள்ளனர். இதுகுறித்து பராஸ்கெவி வெளியிட்ட டுவிட்டர் செய்தி, இனவெறியை தூண்டும் வகையில் இருந்தது.

இதனால், ஒலிம்பிக் போட்டிக்கான கிரீஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதுகுறித்து கிரீஸ் அணியின் தலைவர் இசிடோரோஸ் கூறுகையில், ஒலிம்பிக்கின் அடிப்படை விதியைக் கூட மதிக்காமல் நடந்து, தவறு செய்துள்ளார். வேறு வழியின்றி கிரீஸ் அணியில் இருந்து நீக்கப்படுகிறார், என்றார்.

இதனிடையே, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து பராஸ்கெவி கூறியது:

எனது டுவிட்டரில் வெளியான செய்திக்காக, எனது நண்பர்கள் சக வீரர், வீராங்கனைகளிடம் இதயப்பூர்வமான முறையில் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்பது எனது கனவு, நிறைவேறாமல் போய்விட்டது. எனது தவறை ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் மக்களும், அணியும் எனது தடகள வாழ்க்கைக்கு உதவ வேண்டும். இதுகுறித்து எனது குடும்பத்தினரிடமும், பயிற்சியாளரிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

# ஜப்பானிடம் வீழ்ந்தது யூரோ சம்பியன்



ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான கால் பந்துப் போட்டியில் யூரோ சம்பியனான ஸ்பெயின் அணியை ஜப்பான் அணி வீழ்த்தியது.

ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் ஆண்கள் பிரிவில் யூரோ சம்பியன் ஸ்பெயின், 5 முறை உலக சம்பியன் பிரேசில், இங்கிலாந்து, உருகுவே,தென் கொரியா, ஜப்பான் உள்பட 16 அணிகள் பங்கேற்கின்றன. இவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் காலிறுதிக்குள் நுழையும்.

நேற்று முன்தினம் 'டி' பிரிவில் இடம் பெற்றுள்ள யூரோ சம்பியன் ஸ்பெயின் ஜப்பான் அணியை சந்தித் தது. யூரோ சம்பியனுக்கு இணையாக ஜப்பான் அணி வீரர்கள் கடுமையாக விளையாடினார்கள். இதனால் போட்டி விறுவிறுப்பானது.

ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் ஜப்பான் முதல் கோலை அடித்து ஸ்பெயின் அணிக்கு அதிர்ச்சிஅளித்தது. ஜப்பான் வீரர் ஓட்சூ யூகி இந்த கோலை அடித்தார். அதன்பின் முதல் பாதிநேரத்தில் ஸ்பெயின் அணியால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. இரண்டாவது பாதி நேரத்திலும் ஸ்பெயின் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் ஜப்பான் 1 - 0 கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தியது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஹாண்டுராஸ்- மொரோக்கோ ஆட்டம் 2-2 என்ற கணக்கில் சமநிலையிலும், மெக்சிகோ - கொரியா ஆட்டம் கோல் ஏதுமின்றி சமநிலையிலும் முடிந்தது.

# ஊக்கமருந்து சோதனை ௯ பேர் சிக்கினர்

(லண்டன்)



ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க வந்தோரில் இதுவரை 9 வீரர்கள் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து உட்கொண்டது தெரிய வந்துள்ளது.இதனை தொடர்ந்து, இவர்கள் 9 பேருக்கும்லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்க சர்வதேச தடகள சம்மேளனம் தடை விதித்துள்ளது. இதற்கான அறிவிப்பினை அந்த அமைப்பின் தலைவர் லாமின் டியாக் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளார். இதில் 6 பேர் தடகள வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த அப்டெராஹிம் கவும்ரி, கிரேக்க நாட்டின் ஐரினி கோக்கொனாரியோ, துருக்கி நாட்டின் மரியம் எர்டோகன், ரஷ்யா நாட்டை சேர்ந்த சுவெட்லானா க்லியுகா, யெவ்ஜீனினா சினுரோவா, நைலியா யுலமனோவா ஆகியோர் இந்த பட்டியலில் அடங்குவர். இவர்கள் 6 பேருக்கும் 4 வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 4 வீரர்கள் தாங்கள் ஊக்கமருந்து உட்கொண்டதை ஒத்துக்கொண்டுள்ளனர்.

மேலும், கடந்த 2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற உக்ரேன் நாட்டின் தொபியாஸ் என்கிற வீராங்கனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் உக்ரேன் நாட்டின் மற்றொரு வீராங்கனையான அண்டோனினா மற்றும் பல்கேரியா நாட்டை சேர்ந்த இன்னா எப்டிமோவா ஆகியோருக்கு நடத்தப்பட்ட இரத்த பரிசோதனையில், அவர்கள் செயற்கை வளர்ச்சி ஹார்மோன் மருந்துகள் உபயோகித்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மூன்று பேருக்கும் 4 வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ரிக்ஷாவில் பயணம்

(லண்டன்)

சீன விவசாயி செங்குவாங்மிங், 2ஆண்டுகால ரிக்ஷா பயணத்தின் மூலம், லண்டனை சென்றடைந்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த பயணம், 16நாடுகளைக் கடந்து 2 ஆண்டுகள் கடந்து தற்போது லண்டன் அடைந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, 57 வயதான நான், இது வரைக்கும் சீனாவைத் தவிர வேறு எங்கும் சென்றதில்லை. தடகளப் போட்டியின் பெரும் ஆதரவாளரான நான், ஒலிம்பிக் பெருமையை உலகெங்கும் பரப்பும் விகிதமாக இப்பயணத்தை மேற்கொண்டதாகவும், அவர் கூறினார்.

# உலக ருவென்ரி-20இற்கு தயார்ப்படுத்தல் முக்கியமானது

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் செப்டெம்பரில் ஆரம்பிக்கவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி -20 தொடரில் இலங்கை அணியைப் பொறுத்தவரை தயார்படுத்தல்கள் முக்கியமானவை என இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும், சிரேஷ்ட வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தயார்படுத்தல்கள் மிக முக்கியமானவையாக மாறவேண்டும். தயார்படுத்தல்கள் சிறப்பாக அமைந்தால் அதிர்ஷ்டத்தை நம்பியிருக்காமல் தொடர்ச்சியாகத் திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலம் இத்தொடரைக் கைப்பற்றுவதற்கு முயற்சிக்கலாம். ருவென்ரி -20 போட்டிகள் ஒன்றிரண்டு பந்துகளிலோ அல்லது ஓர் ஓவரிலோ மாற்றப்படக்கூடியது என்ற போதிலும், முழுமையான தயார்படுத்தல்கள் அணிக்கு உதவியாக அமையும்.

இலங்கை அணி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சிறப்பாகச் செயற்படும் ஒரு காலகட்டத்தில் விளையாடுவது குறித்து அதிர்ஷ்டகரமாக உணர்கின்றேன். இரண்டு உலகக்கிண்ண இறுதிப் போட்டிகளிலும், ஓர் உலக ருவென்ரி -20 தொடரின் இறுதிப் போட்டியிலும் பங்குபற்றியமை அற்புதமானது. சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 போட்டிகள் இலங்கையில் இடம்பெறவுள்ள நிலையில் அது இலங்கைக்கு சார்பானதாக அமையும். பழக்கமான ஆடுகளங்களில், பழக்கமான சூழலில் ஆடுவது இலங்கை அணிக்கு அதிக புத்துணர்ச்சியைக் கொடுக்கும் என நான் நம்புகின்றேன் என்றார்.

# முகமது அலிக்கு சிறப்பு விருந்து

(லண்டன்)

முன்னாள் நட்சத்திர குத்துச்சண்டை வீரரும் ஒலிம்பிக் சாம்பியனுமான முகமது அலிக்கு (70) லண்டனில் நேற்று முன்தினம் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மத்திய லண்டனில் உள்ள விக்டோரியா, ஆல்பர்ட் அருங்காட்சியக வளாகத்தில் நடந்த இந்நிகழ்ச்சியில் பிரபல ஹொலிவுட் தம்பதியர் பிராட் பிட், ஏஞ்சலினா ஜோலி, பார்முலா 1 கார் பந்தய நட்சத்திரம் லூயிஸ் ஹாமில்டன் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். 1960ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க அணி சார்பில் களமிறங்கிய முகமது அலி தங்கப்பதக்கம் வென்று அசத்தியது குறிப்பிடத்தக்கது.



லண்டன் சவுத்வார்க் நகரில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் நடைபெற்றது. இதில் பாலிவுட் சூப்பர் ஸ்டார் அமிதாப் பச்சன் ஒலிம்பிக் ஜோதியை ஏந்தி ஓடிச் சென்றார்.



# மே.தீவுகள் வலுவான ஆரம்பம்

(ஆன்டிக்குவா)

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வலுவான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி மேற்கிந்தியத்தீவின் ஆன்டிக்குவாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குப்ரில் 97, டெய்லர் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் ஐந்து, ராம்போல், ரோச் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை விக்கெட் இழப்பின்றி 145 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கிறிஸ் கெய்ல் 85 ஓட்டங்களையும், பௌலி 58 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.



# பூபதி, போபண்ணா ஜோடி பதக்கம் வெல்லும் பெடரர் நம்பிக்கை

(லண்டன்)

லண்டனில் ஒலிம்பிக் போட்டியின் ரென்னிஸ் பிரிவில் இந்திய ரென்னிஸ் வீரர்கள் பூபதி - போபண்ணா இணை நிச்சயம் பதக்கம் வெல்லும் என்று ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் தெரிவித்துள்ளார்.

பூபதி - போபண்ணா இணை ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியில் முதல் ஆட்டத்தில் மேக்ஸ் மிர்ன்யி - அலெக்சாண்டர் பரி இணையை சந்திக்கின்றனர். லியாண்டர் பயஸ் - விஷ்ணு வர்தன் இணை டட்ச் இணையான ரோபின் ஹஸ்ஸி - ஜீன் ஜூலியன் ரோஜர் இணையை சந்திக்கிறது. கிராண்ட் ஸ்லாம் பதக்கம் வெல்வதை விட மிகக் கடுமையானது ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வது. இதில் இந்திய ரென்னிஸ் ஜோடியான பூபதி போபண்ணா இணை நிச்சயம் பதக்கம் வெல்லும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கொக்குவில் கே.சி.சி.சி. அரை இறுதிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

டொனால் வெற்றி கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் அரை இறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி தகுதி பெற்றுள்ளது.

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் மாவட்ட மட்டத்திலான டொனால் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஏ. நிரோஜன் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களையும், நிருஜன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இராஜேந்திரம், நிலாஜனன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 42.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் இளங்கீரன் 65, நிசாந்தன் 45, தேசிகன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோஜன், நிருஜன் தலா இரண்டு, சத்தியன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

ஏனைய மூன்று காலிறுதிப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (எஸ்.பி.)

# மாகாண பெண்கள் கால்பந்து யாழ். மாவட்டம் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் கால்பந்தாட்ட அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இக்கால்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட பெண்கள் கால்பந்தாட்ட அணியும் யாழ். மாவட்ட பெண்கள் கால்பந்தாட்ட அணியும் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட பெண்கள் அணி ஒரு கோலைப் போட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யாழ். மாவட்ட பெண்கள் அணி இரு கோல்களைப்போட்டது. இறுதியில் யாழ். மாவட்ட பெண்கள் கால்பந்தாட்ட அணி 3-0 என்ற கோல் கணக்கில் மன்னர் மாவட்ட பெண்கள் கால்பந்தாடட அணியை வெற்றி பெற்று வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டிக்கு பிரதமவிருந்தினர்களாக வடக்குமகாண விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் மற்றும் வடமாகாணவிளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரையும் கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி கௌரவித்தனர். (93, 20)

# மட்டுவில் மோகனதாஸ் சம்பியன்



(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில்மட்டுவில் மோகனதாஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டி மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த இறுதிப் போட்டியில் கைதடி குமரன் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் ஆரம்பம் முதலே மட்டுவில் மோகனதாஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. ஐந்து செட்களைக் கொண்ட இத்தொடரில் 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்ற மட்டுவில் மோகனதாஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (118)

# அரை இறுதியில் சென்றலைட்ஸ் அணி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றிற்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் அரை இறுதிக்கு சென்றலைடஸ் அணி தகுதிபெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அணிக்கும், சென்றலைட்ஸ் அணிக்குமிடையிலான காலிறுதிப் போட்டி அண்மையில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 43.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சௌமிதரன் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 32 ஓட்டங்களையும், கனிஷ்ரன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும், பிரசாத் ஐந்து சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களையும், சுதர்சன் ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜெயரூபன், கிருசாந்தன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 218 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். பல்கலைக்கழக அணி 43.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. இதில் ஜெயரூபன் 28, ஜெனர்த்தனன் 20, லவன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரிக் துசாந், ஜெனோஜன் தலா மூன்று, வதுசனன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# ஊக்குவிப்பு செயற்பாடு வடக்கு-கிழக்கில் வெற்றி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விளையாட்டு அமைச்சு ஆரம்பித்தவிளையாட்டு ஊக்குவிப்பு செயற்பாடுகள் வெற்றி அளித்துள்ளன.

மாவட்ட விளையாட்டு அதிகாரிகள்ஏப்ரல், ஜூன் மாதங்களில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் விளையாட்டு நிகழ்ச்சிகளையும், பயிற்சி முகாம்களையும் நடத்தினர். விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகே தலைமையில் அமைச்சில் நடைபெற்றமீளாய்வுக் கூட்டத்தில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

மூன்றுதசாப்தங்களாக நீடித்த மோதல் நிலைமை காரணமாக இப்பகுதிகளில் இருந்து தேசிய மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் பங்குபற்ற இயலவில்லை. அதனால் தேசிய மட்டப் போட்டிகளுக்காக இப்பகுதிகளில் இருந்து வீரர்களை உருவாக்கும் நோக்குடன் இத்திட்டம் அமைச்சரினால் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளில் கால்பந்தாட்டம்,குத்துச்சண்டை கராட்டி விளையாட்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற மாகாணமட்ட கராத்தேப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டப்போட்டிக்குத் தகுதி பெற்ற சென்.பற்றிக்ஸ்கல்லூரி வீரர்களுடன் பொறுப்பாசிரியர் தி. கமிஸ்டன் மற்றும் கராத்தே பயிற்றுநர் சென்சே விஜயராஜ் ஆகியோரைக் காணலாம். (எஸ்.பி.)

# யாழ். மத்திய கல்லூரி பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி 179 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்று கடந்த 11ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஞ்சஜன் 28, அலன் டிலன் 73, ஜே. கனிஷ்ரன் 22, நிதுஷன் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வினோஜன், ஜெனதர்ஷன் தலா மூன்று, முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 287 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 46 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சரண்ராஜ் 11, நிரோஜன் 14, ஜெனதர்ஷன் 22, வினோஜன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சௌமிதரன், ஜே. கனிஷ்ரன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)

# நெல்சன் மண்டேலா: வாழ்வும் வழிகாட்டுதலும்!

மண்டேலாவும் அவர் இயக்கமும் இடையில் சில காலம் வன்முறை மீது நம்பிக்கை வைத்திருந்தபோதும், பெரும்பாலும் அவர் அகிம்சைக் கொள்கையையே உயர்த்திப் பிடித்துள்ளார். உலகம் தழுவிய அளவில் மண்டேலா இன்று கொண்டாடப்படுவதற்குக் காரணம் அவருடைய பொருளாதாரக் கொள்கைகளோ ஆட்சிமுறையோ அல்ல, அவரது அகிம்சை வழிமுறையே. எதை அவர் முன்னிறுத்தினாரோ அதன் குறியீடாகவே அவர் இன்று மாறியிருக்கிறார். மாற்றப்பட்டிருக்கிறார். காந்தி, மார்ட்டின் லூதர் கிங் வரிசையில் நெல்சன் மண்டேலாவின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் இதுவே காரணம்.

ஆபிரிக்காவின் முதன்மையான மகன் என்று மண்டேலாவை வருணிக்கிறார் காஸ்ட்ரோ. மண்டேலாவுடன் அவர் சிறையிருந்த ரோபன் தீவுக்குச் சென்று பார்வையிட்டார். நீங்களும் மண்டேலாவைப் போல் தனிமைச் சிறையில் இருந்தவர்தானே என்று கேட்கப்பட்டபோது, அவசரமாக மறுத்தார் காஸ்ட்ரோ. நான் இருந்தது இரு ஆண்டுகள் மட்டும்தான். தயவு செய்து என்னை அவரோடு ஒப்பிடாதீர்கள். அவ்வாறு ஒப்பிட்டால் எனக்கு அவமானமாக இருக்கிறது.

மண்டேலா ஆபிரிக்காவுக்கோ ஐரோப்பாவுக்கோ சொந்தமானவர் அல்லர், அவர் உலகுக்கு சொந்தமானவர் என்கிறார் மண்டேலாவால் ஈர்க்கப்பட்ட நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர், நதின் கோர்டிமர்.

1991ஆம் ஆண்டு காஸ்ட்ரோ கூறியது. "நேர்மையான மனிதர் என்பதற்கு உங்களுக்கு ஒரு உதாரணம் தேவைப்பட்டால், நெல்சன் மண்டேலாவை எடுத்துக்கொள்ளலாம். எதற்கும் விட்டுக்கொடுக்காத, துணிச்சலான, அமைதியான, புத்திசாலியான, செயல்வேகம் கொண்ட ஒரு நாயகன் உங்களுக்குத் தேவைப்படுகிறாரா? இதோ மண்டேலா இருக்கிறார். அவரை நேரில் சந்தித்த பிறகு இந்த முடிவுக்கு நான் வந்து சேரவில்லை. பல ஆண்டுகளாக நான் இதுகுறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இந்த சகாப்தத்தின் அசாத்தியமான ஒரு அடையாளமாக நான் அவரைக் காண்கிறேன்."

பதவியைவிட்டு அகன்ற பிறகு துணிச்சலும் துடிதுடிப்பும் மண்டேலாவிடம் ஒட்டிக்கொண்டது. அதிகாரத்தில் இருந்தபோது சாதிக்கமுடியாத விஷயங்களை இப்போது செயல்படுத்திப் பார்க்க அவர் விரும்பினார். நெல்சன் மண்டேலா அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. "46664: எய்ட்ஸுக்காக உங்கள் வாழ்வில் இருந்து ஒரு நிமிடத்தை ஒதுக்குங்கள்" என்னும் வாசகத்துடன் தொடங்கப்பட்ட பிரசாரம், பரவலான கவனத்தைப் பெற்றது. (466 என்பது ரோபன் தீவுச் சிறையில் மண்டேலாவின் கைதி எண். 64 சிறையிலிருந்த வருடத்தைக் குறிக்கிறது). நான் ஒரு எய்ட்ஸ் நோய் சிகிச்சை ஆதரவாளர் என்னும் வாசகத்தை தனது ரீ ஷேர்ட்டில் அணிந்து பெருமிதத்துடன் வலம் வந்தார்.

2005இல் ஒரு கூட்டத்தில், வெடித்துக் கிளம்பிய அழுகைக் கிடையே ஓர் உண்மையை ஒப்புக் கொண்டார். ஆம், என் சொந்த மகன் மக்காதோ, எய்ட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டு, இறந்துபோனான். தென் ஆபிரிக்கா மட்டுமல்ல ஒட்டுமொத்த ஆபிரிக்காவும் ஒன்று சேர்ந்து எய்ட்ஸை விரட்டியடிக்க வேண்டும்.

தொண்டு செய்வதை தனது முதன்மையான பணியாக மாற்றிக்கொண்டார். புஷ், இராக் மீது தொடுத்த யுத்தத்தை எதிர்த்தார். புஷ்ஷிடம் பேசி தன் வருத்தங்களைத் தெரிவிக்க அவர் விரும்பியபோது, அவர் தொலைபேசிக்குப் பதிலில்லை. உடனே மண்டேலா சீனியர் புஷ்ஷைத் தொடர்பு கொண்டார். உங்கள் மகனிடம் பேச முயன்றேன். அவர் பதிலளிக்கவில்லை. நீங்கள் உங்கள் மகனைக் கொஞ்சம் கண்டித்து வையுங்கள். மகனை ஒரு தந்தையால் கண்டித்து வழிக்குக் கொண்டுவர முடியும் என்று நம்பும் ஓர் அப்பாவி ஆபிரிக்கத் தந்தையாக மண்டேலா வெளிப்பட்ட தருணம் இது.

தனது 89ஆவது பிறந்தநாளின்போது, "தி எல்டர்ஸ்" என்னும் பெயரில் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். ஜிம்மி கார்ட்டர், டெஸ்மான் டுட்டு, கோ∴பி அனான் போன்ற மூத்தவர்களோடு அணி சேர்ந்து அரசியல் வழிகாட்டலை நடத்தலாம் என்று திட்டமிட்டார். யுத்த பூமியாக மாறியிருந்த டா∴பருக்கு அமைதிக் கு ழு அனுப்புவது, உலக அமைதி குறித்து விவாதிப்பது என்று சில முயற்சிகளை மேற்கொண்டார்.

2009இல் பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மண்டேலா தனது வாழ்த்துகளை அவருக்குத் தெரிவித்தார். உலகை மாற்றும் கனவை யாரும் மேற்கொள்ளலாம் என்பதை ஒபாமாவின் வெற்றி உணர்த்துகிறது என்றார். காந்தியும் மண்டேலாவும் தன்னை ஈர்த்த முக்கிய தலைவர்கள் என்று ஒபாமா முன்னர் கூறியிருந்தார்.

மண்டேலாவின் நோக்கங்களை, கனவுகளை கேள்விக்கு உட்படுத்த முடியாது. தென் ஆபிரிக்கர்கள் சுதந்திர, ஜனநாயக தேசமாக உயிர்த்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். நிறவெறி ஆட்சியை உடைத்து ஜனநாயகத்தை மீட்டுக்கொண்டு வந்ததில் அவர் பங்களிப்பு மிக முக்கியமானது. ஆனால் அவர் மேற்கொண்ட நடவடிக்கைககளும், அமுல்படுத்திய பொருளாதாரத் திட்டங்களும் மண்டேலாவின் நோக்கங்களைச் சிதறடித்தன.

நூற்றாண்டுகால அடிமை வாழ்க்கையை, நூற்றாண்டு கால காலனியாதிக்க விளைவுகளை ஐந்தாண்டு காலத்தில் மாற்றிவிட முடியாது. மாற்றங்கள் உடனே நிகழ்ந்துவிடும் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்று தேர்தல் வாக்குறுதியிலேயே மண்டேலா அழுத்தமாக குறிப்பிட்டார். தென் ஆபிரிக்கா செல்லவேண்டிய பாதை நீண்டது என்பதிலும் இருவேறு கருத்துகள் இல்லை. ஆனால், மண்டேலா நிர்வாகம் ஆட்சியில் இருந்த ஐந்து ஆண்டுகளில் தெளிவாக அரசி யல் பாதையை வகுத்துக் கொள்ளவில்லை. கனவுக்கும் செயல்திட்டத்துக்கும் இடையே, கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையே, இலட்சியத்துக்கும் யதார்த்தத்துக்கும் இடையே விழுந்துவிட்ட இடைவெளியை இந்த ஐந்தாண்டுகளில் மண்டேலாவால் குறைக்க முடியவில்லை.

அரசியலில் இருந்து விலகிக்கொள்வதாக 2006ஆம் ஆண்டு தனது 88ஆவது வயதில் மண்டேலா அறிவித்தார். இந்த அறிவிப்பை வெளியிடுமாறு தென் ஆபிரிக்கா அரசாங்கம் அவரை நிர்ப்பந்திப்பதாகவும். அரசாங்கத்தை விமர்சனம் செய்து அவர் சில சமயம் பேசுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு என்றும் யூகங்கள் எழுந்தன. எப்படியிருந்தாலும், அவர் மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட தலைவராக இருந்தபோதே பதவியிலிருந்து தாமாக விலகிக்கொண்டார். சமூக சேவைப் பணிகளைத் தொடர்ந்தார்.


**ஜூலை 18 - நெல்சன் மண்டேலாவின் பிறந்தநாள்.**

– கிழக்கு பதிப்பகம் வெளியிட்டிருக்கும் நெல்சன் மண்டேலா புத்தகத்தில் இருந்து ஒரு பகுதி.



## யானைத் தூக்கம்

யானை நின்று கொண்டே தூங்கக் கூடியது. அதன் தலையும், துதிக்கையும் அசையாமல் இருப்பதையும் துதிக்கையின் நுனி தரையைத் தொட்டுக்கொண்டு இருப்பதையும் கொண்டு யானை நின்று கொண்டே தூங்குகிறது என்று தெரிந்து கொள்ளலாம்.



# ரோபோ ஹோட்டல்!

சீனாவின் ஹாபின் நகரத்தில், வித்தியாசமான ஹோட்டல் உள்ளது. இதில் பணிபுரியும் வரவேற்பாளரில் இருந்து, சர்வர் வரை, அனைத்துமே ரோபோக்கள் தான். இந்த உணவகத்துக்கு, ரோபோ ஹோட்டல் என்று தான் பெயரிடப்பட்டுள்ளது. இங்கு, 18 ரோபோக்கள் உள்ளன. வாடிக்கையாளர் உள்ளே நுழைந்ததும், "ரோபோ உணவகம் உங்களை வரவேற்கிறது..." என பதிவு செய்யப்பட்ட குரலில், ஒரு ரோபோ, வரவேற்கும்.



சமையல் பணியில் உதவுவதற்கும், சில ரோபோக்கள் உள்ளன. சமையலுக்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துக் கொடுப்பது போன்ற பணிகளை, இந்த ரோபோக்கள் செய்யும். உணவு தயாரானதும், அதை வாடிக்கையாளரிடம் கொண்டு செல்வதும், ரோபோ தான். இவை நடந்து செல்வதற்காகவே, ஹோட்டலில் பிரத்தியேக வழித்தடம் உருவாக்கப்பட்டுள்ளது.



இங்குள்ள ஒவ்வொரு ரோபோவும், 1.3 மீற்றரிலிருந்து, 1.6 மீற்றர் உயரமுடையவை. பத்துக்கும் மேற்பட்ட முக உணர்வுகளை வெளிப்படுத்தும் தொழில்நுட்பமும், இந்த ரோபோக்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. சீன மொழியில், ஒரு சில வார்த்தைகளை, இந்த ரோாபோக்கள் பேசும். இந்த ரோபோக்களை இயக்குவதற்காக, ஹோட்டலின் ஒரு பகுதியில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இதில், பத்து இன்ஜினியர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த ரோபோக்களுக்கு இரண்டு மணி நேரம், "சார்ஜ்" ஏற்றினால், ஐந்து மணி நேரம் தொடர்ந்து செயற்படும். சீனாவைச் சேர்ந்த பிரபலமான ரோபோ தயாரிப்பு நிறுவனம் தான், இந்த ஹோட்டலை அமைத்துள்ளது. இதற்காக, 120 கோடி ரூபா செலவு செய்துள்ளது. ஒரு ரோபோவை வடிவமைப்பதற்கு, 60 லட்சம் ரூபா செலவாகியுள்ளது. தங்களால் தயாரிக்கப்பட்டுள்ள ரோபோக்களை பிரபலப்படுத்துவதற்காகவே, இவர்கள் இந்த ஹோட்டலை ஆரம்பித்துள்ளனர். இந்த ஹோட்டலில் சாப்பிடுவதற்கு, ஒருவருக்கான சாப்பாட்டு செலவு, குறைந்தது, 2,500 ரூபா.

இந்த ஹோட்டலுக்காக போட்ட முதலீட்டை எடுப்பதற்கு, இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்பது, சம்பந்தபட்ட நிறுவனத்துக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும், இதைப் பார்த்து, பிரபலமான ஹோட்டல் நிறுவனங்கள், தங்கள் ரோபோக்களை விலைக்கு வாங்கும் என்ற நப்பாசையில் இருக்கிறது, அந்த நிறுவனம்.

"அதெல்லாம் சரி... ரோபோக்களை பயன்படுத்துவதற்கு, பல்வேறு தொழில்கள் இருக்கும்போது, ஹோட்டல் தொழிலுக்காக பயன்படுத்துவது ஏன்?" என கேட்டால், "சீனாவில் ஹோட்டல் வேலைக்கு ஆள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. இந்த சிரமத்தைக் குறைப்பதற்காகவே, ஹோட்டல் வேலைக்கான ரோபோக்களை தயார் செய்துள்ளோம்..." என்கின்றனர்.

# சினிமா சினிமா



() நடிகர் கமலஹாசனின் இளையமகளும், பிரபல ஹிந்தி நடிகர் நஸ்ருதீன் ஷாவின் இளைய மகன் விவானும் காதலிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. அக்ஷராவும், விவானும் நீண்டகாலமாக நண்பர்களாக இருந்ததாகவும், பின்னர் அந்த நட்பு காதலாக மாறியதாகவும் இருவரும் தங்களது காதலை மிகவும் இரகசியம் காத்து வந்ததாகவும் கூறப்படுகிறது. இவர்கள் நட்புடன் இருப்பது அனைவருக்கும் தெரிந்தாலும், காதல் புரிந்து வருவது வெகு சிலருக்கே தெரியுமாம். சமீபத்தில் அக்ஷ்ராவின் பிறந்தநாள் விழாவில் விவானும் கலந்து கொண்டுள்ளார். அப்போது தங்களது காதல் பற்றி அக்ஷ்ராவின் அக்காவும், நடிகையுமான ஸ்ருதிஹாசனிடமும் பேசியதாக கூறப்படுகிறது.





() "கோ" படம் மூலம், நடிகை ராதாவின் மகள் கார்த்திகா, பிரபலமாகி விட்டார். அடுத்து, மணிரத்னத்தின், "கடல்" படத்தில், இரண்டாவது மகள் துளசி நடிக்கிறார். இதனால், மிகுந்த உற்சாகத்தில் இருக்கும் ராதா, "ஒரு காலத்தில் நானும், என் சகோதரி அம்பிகாவும் தென்னிந்திய சினிமாவை கலக்கியது போல், என் மகள்களும் பெரிய அளவில் கலக்குவர்..." என்கிறார்.

() இதுவரை, 7.1 என்ற ஒலித் தொழில்நுட்பத்தை, ஹொலிவுட் மற்றும் பாலிவுட் படங்களுக்குத்தான் பயன்படுத்தி வந்தனர். ஒலியானது, தியேட்டரில் பல பகுதிகளில் இருந்து வெளியாவது போல் அமைக்கப்படும் இந்தத் தொழில்நுட்பத்தை, முதன்முதலாக தமிழில், "ஆதிபகவன்" படத்தில் அறிமுகம் செய்கின்றனர்.



() தமிழில் ஹரி இயக்கிய "சாமி" படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்கிறார் கே.எஸ். ரவிக்குமார். தமிழில் நடித்த திரிஷாவையே ஹிந்தியிலும் நடிக்க வைக்க திட்டமிட்டார். ஆனால் இந்த வாய்ப்பை திரிஷா மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது. "தமிழில் மூன்று படங்களில் தொடர்ச்சியாக நடித்து வருவதால், ஒப்புக் கொள்ள இயலவில்லை" என திரிஷா தரப்பில் கூறப்படுகிறது. "கட்டா மிட்டா" படத்தின் மூலம் ஹிந்திக்கு சென்ற திரிஷாவுக்கு இறங்கு முகம் என்பதால் ஹிந்தி வாய்ப்புகளை அவர் மறுப்பதாகவும் கூறப்படுகிறது.




▶ மிக்கிமௌஸ் என்ற பெயர் வால்ட் டிஸ்னியின் மனைவியால் வைக்கப்பட்டது.

▶ பெர்னாட்ஷா பூரண சைவ உணவுக்காரர்.

▶ அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தன் வாழ்நாளில் ஒரு தடவை கூட தலைமுடி வெட்டிக் கொள்ளவில்லை.

▶ விமான விபத்தின் காரணம் அறிய விமானத்தினுள் வைக்கப்படும் பெட்டி கறுப்புப் பெட்டி என்று அழைக்கப்படுகிறது. இதன் நிறம் மஞ்சள்.

▶ இமாலயத் தவறு என்னும் வார்த்தையை முதன் முதலாகப் பயன்படுத்தியவர் காந்தி.

▶ மற்ற நாட்களில் நடப்பதை விட பௌர்ணமியன்று 50 சதவீதம் கொலைகளும் 100 சதவீதம் தீய சம்பவங்களும் அதிகமாக நடக்கின்றன என்று அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

# லொக்கேஷன்

— சுதா —



திரைப்படம் எடுப்பது தொடர்பான எத்தனையோ வேலைகளில் முக்கியமானதும், சற்று சிரமமானதும் என்றால், அது லொக்கேஷன் பார்ப்பதுதான். அவுட்டோர் எனப்படும் வெளிப்புறக் காட்சிகளுக்கான இடங்களைத் தேர்வு செய்வது என்பது ஒரு சுவாரஸ்ய அலைச்சல். பாலுமகேந்திராவின் படங்களுக்காக லொக்கேஷன் பார்ப்பதில் தொடங்கிய பயணம், பிறகு நண்பர்களின் படங்களுக்காகத் தொடர்ந் தது. பொதுவாக ஒளிப்பதிவாள நண்பர் கள[illegible]னேயே அதிகநேரம் செலவழிப்பது என் வழக்கம்.

பழனியில் தொடங்கி வாரணாசி வரைக்கும் நண்பர் ஆர்தர் வில்ஸனுடன் பல ஊர்களில் சுற்றியிருக்கிறேன். அப்போது நண்பர் ஜெயமோகனும் எங்களுடன் இருந்தார். "இந்த இடத்த உங்க கமெராவுல எப்பிடி காமிப்பீங்க, பிரதர்?" என்கிற கேள்வியை அநேக மாக எல்லா இடம் குறித்தும் கேட்டுக் கொண்டேயிருந்தார். ஜெயமோகனது திரையுலகப் பிரவேசத்தின் தொடக்க காலம் அது. ஆனால், அந்த ஜெய மோகன் இப்போது லொக்கேஷன் குறித்து எங்களுக்கே நிறைய யோசனைகள் சொல்கிறார். எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த சீசனுக்குப் போனால் படப்பிடிப்புக்கு சௌகரியமாக இருக்கும் என்பது வரை தெரிந்து வைத்திருக்கிறார்.

நண்பர்களுக்காக சுற்றியதுபோக, சென்ற மாதம் எனக்காக, எனது திரைப்படத்துக்கான வெளிப்புற இடங்களை தேர்வு செய்வதற்காக "லொக்கேஷன்" பார்க்கச் சென்றிருந்தேன். தமிழக - கேரள எல்லையோரப் பகுதிகள் மனதில் இருந்தன. எனது ஒளிப்பதிவாளர் பாலசுப்ரமணியம், அப்போது திருச்செந்தூரில் இருந்தார். இயக்குநர் சீனு இராமசாமியின் "நீர்ப்பறவை" திரைப்படத்தின் படப்பிடிப்பு அங்கு நடந்து கொண்டிருந்தது. பாலுவைப் பார்க்க திருச்செந்தூர் சென்றேன்.

சமீபகாலமாக சினிமாக்காரர்களின் கவனம் ஈர்க்கப்பட்ட மணப்பாடு கிராமத்தில் மணிரத்னத்தின் "கடல்" படப்பிடிப்பு அப்போதுதான் நடந்து முடிந்திருந்தது. அதுபோக "நீர்ப்பறவை"க்காக பாலுவும் அங்கு படம்பிடித்திருந்தார். மணப்பாடுக்குள் எங்கள் கார் நுழையும் போது, மின்சாரம் இல்லாமல் ஊரே இருளில் மூழ்கியிருந்தது. தெருக்களில் தத்தம் வீட்டு வாசல்களில் நாற்காலி போட்டு மணப்பாடுவாசிகள் உட்கார்ந்திருந்தனர். சட்டென்று வேறெந்த லோகத்துக்குள்ளோ பிரவேசிப்பது போல இருந்தது. மேட்டிலுள்ள தேவாலயத்தில் மட்டும் விளக்கெரிய, ஆங்காங்கே சோற்றுப் பொட்டலத்தைப் பிரித்து, அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த சிறு குடும்பங்கள்.

ஒருவழியாக, பாலுவுக்கு கதை சொல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து உட்காரும் போது, கடல்காற்று தந்த சுகத்தோடு, என் கண்களைச் சுழற்றின. வழக்கமாக கதை கேட்கும் போது பாலுவுக்குதான் கண்கள் சுழலும். "பிதாமகன்", "180" உட்பட தான் ஒளிப்பதிவு செய்த இருபத்தைந்து திரைப்படங்களில், எந்தவொரு கதையின் இரண்டாவது வரியையும் அவர் இதுவரை கேட்டதில்லை. "பாலு, ஓபெனிங் போர்'ன்ஸ நாம என்ன பண்ணலான்னா....." காற்றின் வேகம் அதிகரித்தது. என்னைப் போலவே இருட்டு நிறக்காரரான பாலுவின் கண்களில் உள்ள வெள்ளை மட்டும்தான், அந்த ஒட்டுமொத்த பிரதேசத்தில் எனக்கு தெரிந்த ஒரே வெளிச்சம். இரண்டாவது வரியில் அதுவும் மறைந்தது. ஆனாலும் கடமையிலிருந்து பின்வாங்காமல் சொல்லி முடித்து, பாலுவை உலுக்கினேன். "உங்கக்கிட்டேருந்து இப்படி ஒண்ண எதிர்பாக்கலங்க". சின்ன திடுக்கிடுதலை சமாளித்து, குத்துமதிப்பாக ஓர் அபிப்பிராயம் சொன்னார்.

இரவு விடிய விடிய கதையைத் தவிர வேறேதேதோ பேசிவிட்டு நானும், பாலுவும் தூங்கிப் போனோம். மறுநாள் சென்னையிலிருந்து இணை இயக்குனர்கள் இளங்கோவும், பார்த்திபனும் நெல்லை வந்து சேர்ந்தனர். எழுத்தாளர் நாறும்பூநாதன் ஏற்கனவே தன் விருப்பத்தைச் சொல்லியிருந்தார். பயணத்தில் அவரையும் சேர்த்துக் கொண்டோம். குற்றாலத்திலிருந்து துவங்கியது எங்கள் பயணம். அச்சன்கோயில் தாண்டி மலைக்கு மேலே காட்டுப் பகுதிக்குச் சென்ற போது மனம் உற்சாகமடையத் தொடங்கியது. "இந்த அடர்ந்த இடத்துக்குள்ளல்லாம் எப்பிடி ஸார் கமெராவ கொண்டு வந்து எடுப்பிய?" நாறும்பூநாதனின் குரலில் பழைய ஜெயமோகன் பேசினார். "ஸார், 23c யில அந்த wide மட்டும் இங்கெ தட்டலாம். மத்தபடி டீட்டெய்ல வேற எங்கெயாவது பண்ணிக்கலாம்". இளங்கோ சொன்னார். வேறு ஏதோ பாஷை பேசுகிறார்கள் என்று நாறும்பூநாதன் தள்ளிப் போய் நின்று எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார். நிறைய நீர்நிலைகளைக் கடந்தோம். எல்லாமே வறண்டிருந்தன. "இன்னும் ஒரே மாசந்தான். சீஸன் ஆரம்பமாயிரும். அப்புறம் நீங்க எதிர்பாக்குற மாதிரி இருக்கும்".

அங்கிருந்து கழுதரொட்டிக்குச் சென்றோம். உள்ளே நுழையும் போதே "இந்த ஊரு பேரே எனக்கு புடிக்கல ஸார். மாத்த சொல்லணும்" என்றார், மனேஜர் ஜேகே. அங்கிருந்து தென்மலை, பிறகு வரும் வழியில் குண்டாறு என அன்றைய நாளின் மாலை வரை பல ஊர்கள். ஆங்காங்கே கிராமத்து டீக்கடைகளில் விதவிதமான வடை, முறுக்குகளுடன் டீ. தென்காசிக் கருகில் ஒரு கடையில் இஞ்சி டீ குடித்துக் கொண்டிருக்கும் போது "ஸார், இந்த ப்ளாக்க பாருங்க. அந்த பெரியவரோட ரிட்டர்ன் ஷாட்ட இங்கெ candidஆ எடுத்திரலாம்." இணை இயக்குனர் பார்த்திபன் சொன்னார். ஊர்களை ஊர்களாகப் பார்க்காமல் படத்தின் காட்சிகளுக்கான லொக்கேஷன்களாக நாங்கள் பார்த்தது நாறும்பூநாதனுக்கு ஆச்சரியமாகவே இருந்திருக்க வேண்டும். அந்தமாதிரி சமயங்களில் சட்டென்று எங்களிடமிருந்து விலகி நின்று எங்களையே அதிசயமாக ஓரக்கண்ணால் பார்த்தார்.

படத்துக்கு தேவையான சில கோயில் பகுதிகளைத் தேடிக் கொண்டிருந்த போது, கருங்காட்டுக்கு அருகில் எங்களின் எதிர்பார்ப்புக்கேற்ப ஒரு பழைய கோயில் இருப்பதாகச் சொன்னார்கள். பழைய கோயில். தாழ்ந்திருந்தது. கோபுரமெல்லாம் இல்லை. உள்ளே சிவபெருமானின் லிங்க வடிவம், மற்றும் பார்வதி தேவி. கோயிலின் பெயர் வசீகரித்தது. "பரவாயில்லைநாதர் திருக்கோயில்". "இத்தன வருசத்துல இப்பிடி ஒரு பேர்ல சிவபெருமான் இருக்கிறது, நமக்கு தெரியல, பாத்தியா?". லொக்கேஷன் மறைந்து "பரவாயில்லை நாதர்" மனதை ஆக்கிரமித்தார். கோயிலுக்கான பெயர்க் காரணம் எதுவாக இருக்கும் என்பதை அறிய பல்வேறு விதமான யோசனைகள். "பரவாயில்லநாதர். சே, என்ன பேர்ல்லாம் இருக்கு பாருங்க, சிவனுக்கு". படியில் கொட்டியிருந்த திருநீற்றை நெற்றியில் பூசிக் கொண்டே இளங்கோ சொன்னார். "பார்த்திபன், பரவாயில்லை நாதர்ன்னு எழுதியிருக்கு பாருங்க. அத நல்லா ஸூம் பண்ணுங்க".

இலக்குடன் சில ஊர்கள், இலக்கில்லாமல் சட்டென்று கண்ணில் சிக்கியவுடன் இறங்கி சென்று பார்த்த ஊர்கள் என ஐந்து நாட்களில் கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு கிலோமீற்றர் பயணம். நிறைய ஊர்களின் பெயர்களை அப்போதுதான் அறிந்தேன். படத்துக்குத் தேவையான லொக்கே'ன்களில் பெரும்பகுதி அமைந்து விட்ட நிறைவில் சென்னைக்குக் கிளம்பினோம்.






## தினமுரசின் புதிர்ப்போட்டியில் நீங்களும் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்!

சரியான விடை எழுதுபவர்களது விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவரவுள்ளது.

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

புதிர்ப் போட்டி 3 இற்கான விடைகளை ஆகஸ்ட் 9 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்

### 2

பின்வரும் சட்டத்திற்குள் இருக்கும் எழுத்துக்களை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று (...........)
2) இலங்கையில் தமிழ் விமர்சனத்துறைக்குப் பணியாற்றிய பெரியார் ஒருவர் (...........)
3) கையூட்டு என்ற பொருள் தரும் சொல் (...........)
4) யானையை இவ்வாறு அழைப்பதுண்டு (...........)
5) பல்வகை மலர்களால் ஆகிய மலைபோன்று பலவகை யாப்புகளால் ஆகிய ஒரு சிற்றிலக்கியம் (...........)

| | | | | |
|---|---|---|---|---|
| சி | லா | ர | ட | ஞ் |
| கு | ல | ம் | க | ச |
| தி | ண் | ற | ள | ப |
| சி | க | ம் | கை | கே |

### 1

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் நெய்யரியை அடிப்படையாகக் கொண்டவை. அதில் எண்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப எழுதப்பட்டுள்ளன. அதனைக் கண்டு A,B,C,D,E ஆகிய எழுத்துக்களினால் காட்டப்படும். சதுரங்களில் இருக்க வேண்டிய எண்களை அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 8 | 11 | 19 | 30 | 49 | 79 |
| 6 | 8 | 5 | 19 | 8 | 38 | 11 | 68 |
| 11 | 14 | 3 | 24 | (C) | 49 | 38 | 30 |
| 17 | 25 | 11 | 27 | 13 | 62 | (D) | 6 |
| 28 | (A) | 14 | 38 | 14 | 76 | 52 | 46 |
| 45 | 70 | 28 | 52 | 24 | 100 | 48 | 2 |
| 73 | 115 | (B) | 80 | 28 | 128 | 80 | 78 |
| 118 | 188 | 73 | 122 | 52 | 180 | 100 | (E) |

(1) A (...........)
(2) B (...........)
(3) C (...........)
(6) D (...........)
(5) E (...........)

## புதிர்ப்போட்டி 1 இல் வெற்றியீட்டியோர்



பெயர்: ஆர்.வர்சிகா
பாடசாலை: வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.



பெயர்: பி.மேசிலோட்
பாடசாலை: விக்கினேஸ்வராக் கல்லூரி.




பெயர்: ஆர்.அபிதா
பாடசாலை: இராமநாதன் கல்லூரி.

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுபவர்கள்

| | |
|---|---|
| பெயர்: இ.சுஜந்தி<br>பாடசாலை:<br>உடுவில் மகளிர் கல்லூரி. | பெயர்: கை.பவதாரணி<br>பாடசாலை:<br>வட்டு. இந்துக் கல்லூரி. |
| பெயர்: து.கோகுலன்<br>பாடசாலை:<br>யாழ். இந்துக் கல்லூரி. | பெயர்: யோ.ஷேரன் றொஷேல்<br>பாடசாலை:<br>சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. |
| பெயர்: இ.பிரியதர்சினி<br>பாடசாலை:<br>உடுவில் மகளிர் கல்லூரி. | பெயர்: யோ.ஷேரன் டேவிஸ்<br>பாடசாலை:<br>சென்ஜோன்ஸ் கல்லூரி. |

### 3

## குறுக்கெழுத்துப் போட்டி




**இடமிருந்து வலம்**

1) பெண்கள் அழகிற்காக நயனத்திற்கும் மை
2) ஞாபகச் சின்னமாக இதனை அமைப்பர்
5) வண்டி என்றும் அழைப்பர்.
8) மூங்கில் என்பது இதன் மறுபெயர்
9) எரிபொருள்களில் ஒன்று.
10) பிரதியைக் குறிக்கும்.
11) கற்பக தரு என்பது இதன் மறுபெயர்
12) வாசனையைக் குறிக்கும்.

**மேலிருந்து கீழ்**

1) உணவு இதனைக் குறிக்கும்.
2) தோழன் என்றும் சொல்வர்.
3) இராசிகளிலொன்று.
6) கட்டளையைக் குறிக்கும்.
7) கடல் என்றும் அழைப்பர்.
9) செல்வங்களில் சிறந்தது.
11) இது கடலைத் தேடி ஓடும்.
12) இது வந்தால் பத்தும் போகும் என்பர்.

## புதிர்ப்போட்டி 1 இற்கான விடைகள்

1) நைஜீரியா
2) கலிபோர்னியா
3) நீலம், மஞ்சள்
4) சுவிற்சர்லாந்து
5) நெதர்லாந்து
6) நூடில்ஸ்
7) நோர்வே
8) மாலைதீவு
9) காம்பியாங
10) நோர்வே

| | | |
|---|---|---|
| 1) 18 | 1) 4 | 1) 9 |
| 2) 145 | 2) 5 | 2) 4 |
| 3) 55 | 3) 1 | 3) 2 |
| 4) 90 | 4) 2 | 4) 5 |
| 5) 7 | 5) 3 | 5) 7 |
| 6) 54 | | 6) 3 |

புதிர்ப்போட்டி 2 இற்கான விடைகளை எதிர்வரும் ஆகஸ்ட் 02 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

### முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் 'பெட்டியில் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் பேடலாம். K.K.S வீதியில் உள்ள தினமுரசு விளம்பர பணிமனையில் உளள புதிப்போட்டிப் பெட்டியிலும் போடலாம்.

அனுப்பவேண்டிய முகவரி

**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................
பாடசாலையின் பெயர் :..............................
தரம் :-..............................
தொலைபேசி இல.:-..............................
முகவரி :-..............................
..............................

# மாங்குளம் பொலிஸ் பிரிவில் இவ் வருடம் 70 விபத்துக்கள் – 8 பேர் உயிரிழப்பு

இவ்வருடம் கிளிநொச்சிக்கும் ஓமந்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் 70 விபத்துக்களும் இதில் 8 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மாங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கனகராயன்குளப் பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் அவர் குறிப்பிடும் போது (ஓமந்தையில் 22 விபத்துக்களில் ஒருவர் இறந்துள்ளார். புளியங்குளத்தில் 17விபத்தில் இருவரும் கனகராயன்குளத்தில் 17 விபத்தில் இருவரும், நெடுங்கேணியில் 14 விபத்தில் இருவரும் மாங்குளத்தில் ஒருவருமாக 70 விபத்தில் 8பேர் இறந்துள்ளனர். இதனை நாம் கட்டுப்படுத்த வேண்டும்.

இப்பகுதியில் வீதி அபிவிருத்தி வேலைகள் பெருமளவு முடிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகனங்கள் வேகமாகச் செல்கின்றன. இதைவிட கட்டாக்காலி மாடுகள் வீதியில் நடமாடுவது அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்துமாறு பிரதேச செயலரிடம் கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளேன் இதைவிட இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டிகளைப் பாவிப்பவர்கள், வெளிச்சமின்றியும், சிவப்புகல் பின்லைற் இன்றியும் வருகின்றனர். அவர்களுக்கு நாம் தண்டனைகள் வழங்காது ஆலோசனை கூறி சிவப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டுகின்றோம். எனவும். குறிப்பிட்டார்.

இதனை விட வேறு பிரச்சினைகள்இருப்பின் தமக்கு தெரியப்படுத்துமாறும், உங்களால் தெரிவிககப்படும் பிரச்சினைகள் ஒரு மாத காலத்தினுள் தீர்த்து வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு ..ட்ட பாடசாலை அதிபர்கள், வீதி அதிகார சபையினர், பிரதேச செயலக, சபை உறுப்பினர்கள், இலங்கை போக்குவரத்துச் சபை உறுப்பினர்கள், தனியார் சிற்றூர்த்திச் சங்கத்தினர், ஆட்டோ சங்கத்தினர் போக்குவரத்து பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்எனப் பலரும் கலந்து கொண்டனர். (12)

## அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(நயினாதீவு)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட குப்பை கூழங்கள் கழிவுகளை அகற்றி ஒன்று சேர்த்து அழிக்கும் இடத்தை நிர்மாணிக்க மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. வேலணை பிரதேச சபை உறுப்பினர் சி.க. கருணாகரமூர்த்தி தெரிவித்தார்.

இப்பிரதேசத்திலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றி எரிக்க இதுவரை காலமும் இடம் இல்லாது குப்பைகள் தேங்கி காணப்பட்டது. அத்துடன் சுகாதார சீர்கேடாகவும் இருந்தது. இந்த நிலையில் இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் வேலணையில் உள்ள அராலி கடற்கரைப்பகுதியில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இடம் குப்பை கூழங்களை அழித்தொழிக்க ஏதுவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (175)

## ஏகாதசி தீர்த்தம்

(அளவெட்டி)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நிகழவுள்ளது. காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும். முற்பகல் 9.00 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவு நடைபெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயண சுவாமி ஸ்ரீதேவி, பூமாதேவி சகிதம் திருவீதியுலா எழுந்தருளுவார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை இடம் பெறும். (68)

## இளம் பெண் மீது கொலை முயற்சி

### சந்தேகநபர் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

மனநலம் குன்றிய 17 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவர் அவரது மாமனால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டு கருவுற்ற நிலையில் அவரை மாமன் கிணற்றில் தள்ளிக் கொலை செய்ய முயன்ற சம்பவமொன்று மல்லாகம் சோடாக்கொம்பனியடி காளிகோவில் வீதியில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் தெல்லிப்பளை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 5 மாதத்திற்கு முன்னர் குறித்த மனநலம் குன்றிய யுவதியை அவரது மாமன் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த யுவதி கருவுற்றிருப்பது தெரியவரவே நேற்று முன்தினம் அவரை மாமன் கிணற்றில் தள்ளிக் கொலை செய்ய முயன்றிருக்கின்றார்.

இதனைக் கண்ட யுவதியின் தாயார் கூக்குரலிடவே மாமன் அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து யுவதியின் தாயாரால் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் இச்சம்பவம் தொடர்பாக முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.


இந்நிலையில் இந்தச் சம்பவம் குறித்து தெல்லிப்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (பா)



வெலிக்கந்தை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திருந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களை சமூகத்துடன் சேர்க்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை மேற்படி புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்ற போது புனர்வாழ்வு அளிக்கப்பட்ட நபர் இராணுவத்தினரால் அவரின் தாயாரிடம் ஒப்படைக்கப்படுவதைக் காணலாம். (77)

## மெய்தான் பாருங்கோ...

### இயல்பான பார்வைகள் வேண்டும்



அண்டைக்கொருக்கா ஒரு அரசாங்க உத்தியோகத்தரைச் சந்திக்கவேண்டி வந்திட்டுது பாருங்கோ! அவர் எனக்கு தூரத்து உறவுமுறை கண்டியளே! அவரோடை குடும்ப விசயங்கள் பலதும் பத்துமாக் கதைச்சுக்கொண்டு வந்து, அரசியலைப் பற்றிக்கதைக் கேக்கை, அவர் என்ன சொன்னவரெண்டால், போர் முடிஞ்சாப்பிறகு நாட்டின்ர வடக்குப் பக்கத்தில நடக்கிற அபிவிருத்தி வேலையள் பலதும் பத்தையும் தென்பகுதியில இருந்து வந்த சிங்கள ஆட்கள் தான் குத்தகைக்கு எடுத்து நடப்பிக்கினம்... இது பெரிய அநியாயம்... எ்ண்டு புலம்பத் தொடங்கியிட்டார் பாருங்கோ!

ஏன் அவையள் எடுத்து நடப்பிக்கிறதால எங்களுக்கு என்ன குறைஞ்சு போச்சுது... எண்டு திருப்பிக்கேட்டன். அதுக்கு அவர்திரும்பி என்னை ஒரு பார்வை பார்த்தார் எனக்குச் சிரிப்பு வந்திட்டுது. சிரிச்சும்போட்டன். அவருக்கு அதுபிடிக்கேல்லை. பிறகு பேச்சை முடிச்சுக்கொண்டு போயிட்டார்.

ஆனா, அவற்ர கொதிப்பு... எனக்குள்ள குடையத் தொடங்கியிட்டுது.இப்ப வடக்குப்பக்கத்தில நடக்கிற பெரும்பாலான அபிவிருத்திப் பணிகளுக்கான குத்தகை ஒப்பந்தங்களை அரசாங்கம் சிங்கள ஆட்களிட்டை ஒப்படைச்சிருக்கிறதுக்கு பல காரணங்கள் இருக்குது பாருங்கோ!

தோலிருக்க சுளை விழுங்கி... சுளை சுளையாகப்பணம் சம்பாதித்த: சம்பாதிக்கிற எங்கட ஆட்களைப்பற்றி நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லைஎன நினைக்கிறன்.

அந்த நாளேலை உந்த வீதி அபிவிருத்திப் பணிகளை 'ஓவசியர் மார்' எண்டு சொல்லுற ஆட்கள் குத்தகைக்கு எடுத்து நடப்பித்தவை கண்டியளே! ஒரு றோட்டு ஓவசியருக்கு உதவியாளனாக மூண்டு வருசம் வேலைபாத்த எனக்கு... அரசாங்கப் பணத்தை எப்படிச் சுளை சுளையாக விழுங்கி... சுளை சுளையாகப் 'பின்பக்கத்தால்' பணம் சம்பாதிச்சவை எண்டதை இந்தச் 'சீனாச்சீனா' சாகேக்கையும் மறக்க ,மாட்டான் பாருங்கோ!

ஒரு டிரைக்டர் பெட்டி கிறேசர் சல்லியை றோட்டில சரி அரைக் கரைவாசியாகப் பங்கிட்டு இரண்டு இடத்தில பறிச்சுப் போட்டு பொருட்களுக்கான விபரப்புத்தகத்தில ரண்டு பெட்டிகிறேசர் சல்லி பறித்ததாக பதியும் படி எனக்குச் சொன்ன ஓவசியர்மார் எத்தனையோ பேரைப் பாத்திருக்கிறன்.

பிறகு அந்தக் கணக்கின்படி இன்னொரு பெட்டிகிறேசர் சல்லியை வீடுகட்டுற ஒருவனுக்கு வித்துக்காசாக்கின சம்பவங்கள் கனக்க இருக்குது. கண்டியளே

இது உதாரணத்துக்கொரு சம்பவம் இப்பிடி அந்த நாளேலை நடந்த சங்கதியளை கேள்விப்பட்டோ என்னவோ தெரியாது அரசாங்கமும் தன்ர இனத்தானுக்கே குத்தகைக்கான கேள்விப் பத்திரத்தை வழங்குது. இதுக்கு வேறை உள்நோக்கங்களும் இருக்கலாம் நான். இல்லையெண்டு சொல்ல வரேல்லை.

இதைவிட இன்னொரு ரகசியமும் இருக்குது பாருங்கோ!

சிங்கள இனத்துக்கு இலங்கையை விட்டால் வேறநாடு இல்லை. அதனால ஒவ்வொரு சிங்களக்குடிமகனும் இது எனது சொந்த நாடு' எண்டஉணர்வோட இருந்து செயற்படுகிற மாதிரி தமிழன் இல்லை. அவனுக்கு வடக்கையும் கிழக்கையும் தவிர, பொலிசு -காணி அதிகாரங்களையும் தவிர வேறெதையும் சிந்திச்சுப்பாக்க வக்குமில்லை: வழியுமில்லை.

தமிழனுக்குரிய சிந்தனை சுரண்டலும்: சுருட்டலுமேயொழிய இது எனது நாடு... என்ற பற்றே கிடையாது இந்தப் 'பற்று' எண்டது சிங்களவன் அடிக்கேக்கை மட்டும் தான் உடம்பில உசுப்பாய் ஏறும்.

இது எனது நாடு...எண்ட ரீதியில சிங்கள இனம் சிந்திக்குமாப் போல தமிழ் இனமும் சிந்திச்சிருந்தால், எங்களுடைய பக்கம் அது றோட்டாயிருந்தாலென்ன தெருவாயிருந்தால் என்ன இப்பிடிச் சீரழிஞ்சு போயிருக்கவேண்டிய அவசியமில்லை.

இப்பிடிச் சீரழிஞ்சதுக்கு போரும் இனவாதியளும் ஒருகாரணமாக இருந்தாலும், அந்த நாளே உத்தியோகத்தர்மாருடைய செய்கை காரியங்களும் ஒரு காரணம் எண்டதை நான் இந்த இடத்தில நிண்டு பறையத்தான் செய்வன் பாருங்கோ.

ஆர் குத்தினாலும் அரிசியாகினால் சரி... எண்டு நினைக்கிறதை விட்டிட்டு இப்பவும் குத்தகைக்கு எடுத்து பழையகால குளறுபடிகளைத் திரும்பவும் இவையள் தொடங்கிறதுக்கு அரசாங்கம் விரும்பேல்லைப் போல கிடக்குது.

போருக்குப்பிறகு இப்பதான் மெல்ல மெல்ல நாடு துளிர்க்கிறமா திரித்தெரியுது. நாடு துளிர்க்கிறதுக்கு தண்ணி ஊத்துற வேலையளை ஆரெண்டாலும் செய்யட்டுமன்..எண்டு நினையுங்கோவன்.

அதைவிட்டிட்டு, தமிழன்ர இடத்தில சிங்களவன் வந்து செய்யுறதோ... எண்டு நினைச்சால், அவனும் விடப்போறதில்லை. நாடும் அபிவிருத்தியடைஞ்ச பாடுமில்லை.

எதையும் இனவாதத் தோடை பாக்காமல் இயல்பாகப் பாத்தியள் எண்டால், உங்களுக்குள்ள அப்பிக்கிடக்கிற இருட்டு விலகி, ஒரு வெளிச்சம் பிறக்கும்... எண்டு நினைக்கிறன்.


- சின்னக்குட்டி சின்னச்சாமி-

# ஊர்காவற்றுறை முகாம் வீதியூடாக பருத்தியடைப்பிற்கு பேருந்து சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்துறை முகாம் வீதியூடாக பருத்தியடைப்பிற்கான தனியார் பேருந்து சேவை ஈ.பி.டி.பியின் ஊர்காவற்துறை பிரதேச அமைப்பாளரும், ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளருமான ம.ஜெயகாந்தனால் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பேருந்து சேவையூடாக முகாம் வீதி மக்கள் பயன் பெறுவார்கள் என்றும், இப்பகுதிக்கான பேருந்து சேவை முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதையிட்டு அப்பகுதி மக்கள் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு தமது நன்றியைத் தெரிவித்தனர்.



இந் நிகழ்வில் ஊர்காவற்துறை தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர், சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே இப் பகுதியின் போக்குவரத்திற்கான பிரதான வீதி மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஊர்காவற்துறை பிரதேச சபையினால் 'புறநெகும' செயற்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 71 பாடசாலைகள் மட்டக்களப்பில் அபிவிருத்தி

(மட்டக்களப்பு)

ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் ஆயிரம் இடைநிலை பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 71 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதன்படி தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு பாடசாலைகளும் தலா 5 இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன், மற்றும் அரசாங்க அதிபர், உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் பங்குகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பில் முறைப்பாட்டுப் பிரிவு

மாகாண சபை தேர்தல்கள் நிறைவடையும் வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் விஷேட பிரிவொன்று நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை தேர்தல் ஆணையாளர் மேற்கொண்டுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் திணைக்களத்தை சேர்ந்த இரண்டு அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்ததன் பின்னரே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சுகாதாரப் பரிசோதகர்கள் நியமனம்

(நயினாதீவு)

தீவகப்பிரதேசத்தில் பொதுச் சுகாதார பரிசோதகராக கடமையாற்றி 5 பேர் தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்களது இடத்திற்கு 5 சுகாதாரப் பரிசோதகர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். இடமாற்றம் பெற்றுச் சென்ற சுகாதாரப் பரிசோதகர்களின் விபரம் பின்வருமாறு. ம.இராஜமோகன், த.கடம்பருபன், ம.அனுசுதனன், கே.அனுதர்ஷன், இ.தயாளன். ஆகியவர்களாவர். (175)

## தண்டம் செலுத்தத் தவறினால் வீட்டில் இருந்தபடி தண்டனை

அபராதம் செலுத்த முடியாத சிறைக்கைதிகள் வீட்டில் இருந்து கொண்டு சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் தண்டனைக் காலத்தை பூர்த்தி செய்யக்கூடிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிடுகின்றது.

அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக இந்த திட்டம் நிதி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க தெரிவித்தார். சிறைச்சாலைகளில் நிலவுகின்ற நெருக்கடியை குறைத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் கருதி இப்புதிய திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் கூறினார்.

புதிய திட்டம் குறித்து அமைச்சர் சந்திரசிறி கஜதீர ஆர்வம் காட்டியுள்ளதுடன், அதனை விரைவில் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளதாகவும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். அமைச்சின் கீழ் இயங்கும் சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஊடாக கைதிகளை கண்காணிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

கிராமிய மட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் பொருட்டு அந்தந்த பிரதேச செயலாளர்கள் ஊடாக விடுவிக்கப்படும் கைதிகளை ஈடுபடுத்திக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## எங்கள் அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகனின் வாழ்வும் பணிகளும்



சமூகப்பணியால் மிக இளம் வயதிலேயே கலாநிதிப் பட்டம் பெற்ற ஒருவர் சமயத்தைப் போதனை நெறியாக மட்டும் கொள்ளாது சாதனை நெறியாகவும் மாற்றிய அறிஞர், முதியோர், விசேட தேவையுடையோர் அனைவருக்கும் காப்பகங்கள் அமைத்து பாதுகாக்கும் தருமசீலர். இலங்கைக்குள் மட்டுமல்ல அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, பிரித்தானியா எனப் பற்பல தேசங்களிலும் செஞ்சொற் செவியின்பம் வழங்கிப் பேர் புகழ் பெற்ற பேச்சாளர், ஸ்கந்தா அன்னையைச் செல்வச் செழிப்போடு வாழவைத்த அதிபர், அவர் வேறு யாருமல்லர். அவர் தான் செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்.

ஆறுமுகம் - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வராக 1961 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி பிறந்தவர் திருமுருகன் இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கலைமாணிப்பட்டத்தை பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்தும் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா, கலாநிதி ஆகிய பட்டங்களை யாழ். பலகலைக்கழகத்திலிருந்தும் பெற்றுக் கொண்டார்.

1989 ஆம் ஆண்டில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் தனது ஆசிரியர் தொழிலுக்கான முதல் நியமனத்தை இவர் பெற்றுக் கொண்டார். 1993 ஆம் ஆண்டில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு இவர் ஆசிரியராக இடமாற்றம் பெற்றார். அன்று தொடக்கம் இன்று ஓய்வுபெறும் வரை 18 ஆண்டுகளுக்கும் மேலாக இவரது பணி ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு தொடர்ச்சியாக கிடைத்தது.

இந்து நாகரிகத்தையும், இந்து சமயத்தையும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு எழிமையாகவும், கலகலப்பாகவும் கற்பிப்பதில் இவருக்கு நிகர் வேறு எவருமில்லை.

இவரிடம் இப்பாடங்களைக் கற்ற மாணவர்கள் அதியுயர் சித்திகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு பெற்றமை மட்டுமல்ல வாழ்விலும் அற ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கும் ஆன்மிக நாட்டமுள்ள மாணவர்களாக விளங்கி வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

இன்று ஈழத்தில், பேச்சுத்துறையில் முன்னணியில் இருக்கும் மாணவர்களில் பலர் இவரிடம் கற்றவர்கள் என்பது மட்டுமல்ல இவர் பயிற்சியளித்த விவாத அணி தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வறிய மாணவர்களுக்குத் தனது சம்பளத்திலிருந்து பெருந்தொகை நிதியைக் கொடுத்ததோடு நின்றுவிடாது வெளிநாடுகளிருந்தும் நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும், உப அதிபராகவும், பிரதி அதிபராகவும், ஸ்கந்தாவில் இவரது பணி வளர்ச்சியடைந்தது.

ஸ்கந்தாவில் அதிபரான சிவாஜி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 16.03.2008 முதல் இக்கல்லூரியின் புதிய அதிபராகப் பதவியேற்றார்.

சிறந்த தலைமைத்துவம் வாய்ந்த அன்பான அறிவுரை கூறி வழிநடத்தும் சிறந்த அதிபராக இவர் விளங்கினார்.

கல்லூரியின் முன்னேற்றம் கருதி இசுரு திட்டத்தினுள் பாடசாலையை இணைந்து கொண்டார். இசுரு திட்ட அதிகாரிகளிடமும், கல்வி அமைச்சு அதிகாரிகளிடமும் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி புதிய மூன்று மாடிக்கட்டடம், இருமாடி மனையியல், விவசாய ஆய்வுகூடம், அவற்றுக்கான நவீன உபகரணங்கள் என்பவற்றோடு பௌதிகவளத்துறையில் ஒரு பல்கலைக்கழகம் போன்ற நிலைக்கு ஸ்கந்தாவை மாற்றி அமைத்தார்.

இன்றைய ஆறு.திருமுருகனின் மகோன்னதமான வளர்ச்சிக்கெல்லாம் காரணமாக அமைந்தது அவரது சமயம் சார்ந்த சொற்பொழிவுத்திறனே ஆகும். அவரது சொற்பொழிவு கண்டு அதிசயித்த இணுவில் காரைக்கால் சிவன் தேவஸ்தானத்தினர் 'செஞ்சொற் செல்வர்' என்னும் பட்டத்தை அவருக்கு அளித்துக் கௌரவித்தனர். அவர் பின்னர் செந்தமிழ் ஞாயிறு, டில்லி தமிழ் சங்க செந்தமிழ் ஞாயிறு எனும் பட்டம் அனைத்துலக வளர் தமிழ் ஆய்வு மாநாட்டில் வழங்கப்பட்டது. இவ்வாறு பல பட்டங்களைப் பெற்றுக் கொண்ட போதும் செஞ்சொற் செல்வர் என்பதே அவருடன் எப்போதும் சேர்ந்திருந்தது.

அவரது சமய சொற்பொழிவுகள் இலங்கையில் இடம்பெறாத தலங்களே இல்லை என்னும் அளவிற்கு எல்லாப்பிரதேச ஆலயங்களிலும் அவரது சொற்பொழிவுகள் இடம்பெற்றுள்ளன. இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, இந்தியா முதலிய பல நாடுகளில் அவரது சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன.

சமயத்துறை சார்ந்த அவரது வளர்ச்சியின் மணி மகுடமாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் பதவி அமைந்தது. அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வழிகாட்டலில் வளர்ந்த திருமுருகனுக்கு அவரது மறைவின் பின் தலைமைப்பதவி வழங்கப்பட்டது.

சமயப்பணிகள் மூலம் தான் பெற்றுக்கொண்ட அன்பளிப்புகளையும், அன்பர்கள் தாமாக முன்வந்து வழங்கிய நிதியையும் அவர் ஏழை எளியவர்களுக்கும், ஆதரவற்றோருக்கும் வாழ்வளிக்கும் சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தினார். அவரது சமூகப் பணிகள் முக்கியமானவை.

ஆதரிக்க யாருமற்ற முதியோர்களுக்கான சிவபூமி முதியோர் இல்லம், சிவபூமி மனவளர்ச்சிப் பாடசாலை, சிவயோகம் அன்னையர் குடியிருப்பு, கேன் புற்று நோயாளர் காப்பகம் அமைக்க உதவியமை, காலத்திற்கு காலம் யாழ்.வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தமை, யாழ்ப்பாணத்தில் இந்துக்கள் கண்தான சபையை உருவாக்கியமை.

இவரது சமூக சேவைகளிற்காக யாழ்.பல்கலைக்கழகம் கௌரவகலாநிதி பட்டம் கொடுத்துக் கௌரவித்துள்ளது. சமயம், சமூகம், கல்வி என்னும் மூன்று தளங்களில் வெற்றிகரமான தனது பயணத்தைத் தொடர்ந்து வரும் ஆறு.திருமுருகன் அவர்கள் தனது அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்வது எமக்கு துன்பத்தைத் தந்தாலும் அவரது பணிகளால் தமிழ் சமூகம் பெறப் போகின்ற நன்மைகளை எண்ணி வாழ்த்தி மகிழ்வோடு விடைகொடுப்போம்.


பா.மகாலிங்கசிவம்

(44)

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
கல்வி முரசு
Grade - 13
இரசாயனவியல்
02 T II
நேரம் : 2 மணி
ஆசிரியர் : S.T.ஜனார்த்தனன் (Bsc.)

தொடர்ச்சி.....

b) $C_2Cl_2$ மூல்கூற்றிலுள்ள காபன் அணுக்களிலுள்ள ஓபிற்றல் கலப்பினைக் கருத்திற் கொள்க. கூடு A யிலுள்ள பெட்டிகள் ஈற்றோட்டு ஓபிற்றல்களைக் குறிக்கின்றன. கூடுகள் A, B இனை நிரப்பும் போது கீழ்த்தரப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைய நிரப்புக.





கூடு A,C அணுவின் ஒபிற்றல் கலப்புக்கு முன்பு (தரை நிலையில்)

கூடு A,C அணுவின் ஒபிற்றல் கலப்பின் பின்

**அறிவுறுத்தல்**

- கூடு B க்குரிய ஓபிற்றல் அமைவுக்கு ஏற்றவாறு பெட்டிகளை வரைக.
- ஓபிற்றல்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு பெட்டிகளுக்குப் பெயரிடுக.
- கூடுகள் A, B களில் இலத்திரன் பரம்பலை எடுத்துக் காட்டுக.

c) 


P,Q,R, S எனும் சேதனச் சேர்வைகளில் P ஆனது 60 இலும் குறைந்த சார்மூலக் கூற்றுத் திணிவுடையது. A,B,C,D என்பவை அசேதனச் சேர்வைகளாகும். P, Q,R, S என்பவற்றின் கட்டமைப்புச் சூத்திரங்களையும் உரிய பெட்டிகளில் எழுதுக.

P - ☐ Q - ☐ R - ☐ S - ☐


A - ☐ B - ☐ C - ☐ D - ☐

a) C, H, N அணுக்களைக் கொண்ட சேதனச் சேர்வையில் திணிவுப்படி C - 60% H - 12 % N - 28 % காணப்படுகிறது. சேதனச் சேர்வையின் அனுபவ சூத்திரத்தைக் கணிக்க.
(C -12, H -1, N-14)

b) $C_5H_9Cl$ எனும் மூலச்கூற்றுச் சூத்திரமுடைய ஒளியியற் சமபகுதிகமுடைய P,Q,R, S எனும் நான்கு சேர்வைகளுள் ஒன்றாயினும் அவற்றுள் வேறொன்றின் ஒளியியல்பு சமபகுதிகமல்ல P, Q, R, S , இனை Ni / $H_2$ இனால் ஐதரசனேற்றம் செய்யப்படும்போது Q, R என்பவை ஒரே விளைவைப் பெறுகின்றன. P, Q இனது விளைவுகள் நிலைச் சமபகுதியங்களாகக் காணப்படுகின்றன. R ஆனது கேத்திர கணித சமபகுதிக வடிவில் காணப்படக்கூடியது. Q,S இனை $AgNO_3$ நீர்க்கரைசலுடன் தாக்கமுற விட்டபோது S இலும் பார்க்க Q விரைவில் வெண்ணிற வீழ்படிவைத் தந்தது. கீழ்த்தரப்படும் அட்டவணையை நிரப்புக.

| சேர்வை | கட்டமைப்புச் சூத்திரம் |
|---|---|
| P | |
| Q | |
| R | |
| S | |

c) பின்வரும் மாற்றீட்டினை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதை தகுந்த நிபந்தனைகளையும், கட்டமைப்புச் சூத்திரங்களையும் தொடர்பு படுத்தி எழுதிக் காட்டுக.





d) பின்வரும் சோடிச் சேர்வைகளை எவ்வாறு இரசாயன முறையில் வேறுபடுத்தி இனங்காண்பீர் என்பதை தகுந்த முறையில் வெளிக்காட்டுக.




4) a) ஒரு சேதனச் சேர்வை C, H, Br என்பவற்றைக் கொண்டுள்ளது. இதனைத் தகனித்த போது வெளியிடப்படும் $CO_2$, $H_2O$ 1:1 மூல் விகிதம் C:Br திணிவு விகிதம் 3:10 ஆகவும் காணப்படின் சேதனச் சேர்வையின் அனுபவ சூத்திரம் யாது?
(C-12, H-1, Br -80)

b) பின்வரும் தாக்கத்தினைக் கருத்திற் கொள்க. கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை குறியீடுகளை எழுதி நிரப்புக.





1) இத் தாக்கத்திற்கு NaCN உடன் ........................................ இனைச் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

2) இத்தாக்கத்தில் $CN^-$ ஆனது ........................................................... என அழைக்கப்படுகின்றது.

3) மேற்படி தாக்கம் ...................................................... தாக்க வகையைச் சார்ந்தது.


c) கீழே தொகுப்பு முறையொன்று தரப்பட்டுள்ளது. A,B,C,D,E,F,G என்பவற்றினது கட்டமைப்புகளை தருக. P,Q,R,S என்பவற்றினது நிபந்தனைகளைத் தருக.





A - B - C- D - E - F-

G- P- R - S- Q- H-

பின்வரும் சோடிச் சேர்வைகளை இனங்காண்க

A) 


B) 



(முற்றும்)


க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
கல்வி முரசு
Grade - 13
இணைந்த கணிதம்
02 T II
நேரம் : 2 மணி

ஆசிரியர் :
K.அருளானந்தம்
(Bsc.Hons.Dip-in.Edu)
Har tley College


தொடர்ச்சி....

COD ல் அப்பலோனியஸ்தேபடி
$OC^2 + OD^2 = 2OA^2 + 2AC^2$
$|Z_1+Z_2|^2 + |Z_1 - Z_2| = 2|Z_1|^2 + 2|Z_2|^2$






(B)




$Z - (-2+\varsigma^0) = 5$
ஒவ்வொருமுக்கு (-2,-1) ஐ மையமாகவுடைய 5 அலகு ஆரையுடைய வட்டமாகும்.

P, Q இன் சிக்கலெண்கள் Z ஆகும்.
வட்டச்சமன்பாடு $(x+2)^2 + (y-1)^2 = 5^2$

$x = 1 \quad 9 + (y-1)^2 = 25$
$(y-1)^2 = (\ 4)^2$
$y - 1 = \pm 4$
$y = 5$ or $-3$

$P = (1,5)$
$Q = (1,-3)$
$Z = 1+5\varsigma^0$
or $1-3\varsigma^0$ **(20)**

14) a) $Y = \sin^{-1}(x) \qquad \sqrt{1-x^2}\ \frac{dy}{dx} = 1$

(1) $\frac{dy}{dx} = \frac{1}{\sqrt{1-x^2}}$

(2) $\frac{d^2y}{dx^2} \times \sqrt{1-x^2} - \frac{x}{\sqrt{1-x^2}}\ \frac{dy}{dx} = 0$


$\frac{dy^2}{dx^2}(1-x^2) - x\frac{dy}{dx} = 0$ **(20)**

$\frac{d^3y}{dx^3}(1-x^2) - 2x\frac{d^2y}{dx^2} - x\frac{d^2y}{dx^2} - \frac{dy}{dx} = 0$

$(1-x^2)\frac{d^2y}{dx^3} - 3x\frac{dy^2}{dx^2} - \frac{dy}{dx} = 0$

$x = 0$ ஆக $y = 0\ \frac{dy}{dx} = 1\ \frac{dy^2}{dx^2} = 0\ \frac{d^3y}{dx^3} = 1$ **(20)**

சுற்றளவு = L




$L = 4a\cos\alpha + 2\alpha\sin 2\alpha$ **(20)**

$\frac{dL}{d\alpha} = 4a[2\sin\alpha - 1][\sin\alpha + 1]$ **(20)**

$\frac{dL}{d\alpha} = 0$ ஆக $\alpha = \frac{\pi}{6}$ **(20)**

$\alpha = \frac{\pi}{6} - \varepsilon \quad \frac{dL}{d\alpha} = (+)$
$\alpha = \frac{\pi}{6} - \varepsilon \quad \frac{dL}{d\alpha} = (-1)$ **(20)**

$\alpha = \frac{\pi}{6} - \varepsilon$ ஆக L உயர்வாகும்.

15) a) $\Delta$ ABC சமபக்க $\Delta$

$$\int_0^{\pi/2} \frac{\cos x\, dx}{(1+\sin x)(2+\sin x)(3+\sin x)}$$

$t = \sin x$

$\frac{dy}{dx} = \cos x \qquad \int_0 \frac{dt}{(1+t)(2+t)(3+t)}$ **(10)**

$= \int_0 \frac{1/2}{1+t} + \frac{-1}{2+t} + \frac{1/2}{3+t}$ + **(10)**

$= [\,{}^1/_2\, h\,|1+t| + {}^1/_2\,|n\,|3+t - |n\,|t+2]^1$ **(10)**

$= [\,{}^1/_2\, ln2 + {}^1/_2\, ln 4\ \ ln3 - {}^1/_2\, ln3 + ln 2$ **(10)**

$= {}^5/_2\, ln2 + \frac{3}{2}\, ln 3$

b) $x^3 + \tan^{-1}(x)\,dx$

$= \frac{x^4}{4}\tan^{-1}(x) - \int_0 \frac{x^4}{4(1+x^2)}dx$
**(10)** **(10)**

$= \frac{x^4}{4}\tan^{-1} x - \frac{1}{4}\int_0 x^2 - 1 + \frac{1}{x+1}\,dx$
**(10)**

$= \frac{x^4}{4}\tan^{-1} x - \frac{1}{4}\left[\frac{x^3}{8} - x + \tan{-1}(x)\right] + c$
**(10)** **(10)**

15 (c) $\int_0^{\pi} \sin(mx)\sin(nx)\,dr = \frac{1}{2}\int_0 \cos(m-n)x - \cos(m+n)x\,dx$

$= \frac{1}{2}\left[\frac{\sin(m-n)x}{m-n} - \frac{\sin(m-n)}{m-n}\right]_0^{\pi}$

$= \frac{1}{2}\ [0-0] = 0 \qquad m \neq n$ ஆக

$m = \frac{n}{\pi}$ ஆக

$\int_0^{\pi}\sin(m\alpha)\sin(n\alpha)\,dr = \int_0^{\pi}\sin^2(m\alpha)\ (n\alpha)\,d\alpha =$

$= \frac{1}{2}\ \frac{[x - \sin(2nx)]^{\pi}}{2n}$

$= \frac{\pi}{2}$

$2\cos\alpha\,[-\sin\alpha + \sin 32 - \sin 5\alpha + \sin 7\alpha) = \sin 8\alpha$

$\int_0 \frac{\sin^2 8x}{\cos^2 x}\ dx = 4\int_0 [-\sin\alpha + ain\,3\alpha - \sin 5\alpha + \sin 7\alpha)^2$

$dx = 4\ \frac{\pi}{2} + \frac{\pi}{2} + \frac{\pi}{2} + \frac{\pi}{2}$

$= 8\pi$

$f(x) = a\cos^2 x + b\sin x\cos x + C\sin^2 x$

$= \left[\frac{a}{2} = \frac{c}{2}\right] + \left[\frac{a}{2} - \frac{c}{2}\right]\cos 2x + \frac{b}{2}\ \mathrm{Sin}2x$ **(10)**

$= \frac{a+c}{2} + \frac{a-c^2}{2} + \frac{b^2}{4}\ \mathrm{Cos}\,2x\ \frac{\frac{a-c}{2}}{\sqrt{\left[\frac{a-c}{2}\right]^2 \frac{b^2}{4}}} + \mathrm{Sin}\,2x\ \frac{b/2}{\sqrt{\left[\frac{a-c}{2}\right]^2 \frac{b^2}{4}}}$

$= A + B\cos(2x - \alpha)$

**(20)**

$= \frac{a+c}{2}$

$= \sqrt{\left(\frac{a-c}{2}\right)^2 + \frac{b^2}{4}} \qquad \tan\alpha = \frac{b}{a-c}$

$= \quad f(x) \quad = A+B \quad x = {}^{\pi}/_2$
$x = {}^{\pi}/_2 + {}^{\alpha}/_2 \qquad a = 5,\ b=2,\ c=3$

$= \quad f(x)_{min} \quad = A-B \qquad f(x) = 4\ \ 2\ \cos\ (2x - {}^{\pi}/_4)$

$=$ f(x) ன் வீச்சம்= B $\qquad f(x)_{max} = 4 + 2\ \ x = {}^{\pi}/_8$

அலைவுக்காலம் $= \pi \qquad f(x)_{min} = 4 - 2$

(முற்றும்)

# ஏர்செல் பங்கு விவகாரம்; தயாநிதியிடம் விசாரணை



(புதுடில்லி)

தயாநிதிமாறன் 2004 முதல் 2007 வரை மத்திய தொலைத் தொடர்பு மந்திரியாக இருந்தார். அப்போது, தயாநிதி மாறன் தனது அதிகாரத்தைப் பயன் படுத்தி ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறு வனமான மேக்ஸிஸ் -க்கு விற் பனை செய்யும்படி நெருக்கடி கொடுத்தார் என்று ஏர்செல் நிறுவனத்தின் அதிபராக இருந்த சிவசங்கரன் 2011ஆம் ஆண்டு சி.பி.ஐ.யிடம் புகார் கொடுத்தார்.

அதன் அடிப்படையில் தயா நிதிமாறன் அவரது சகோதரர் கலாநிதி மாறன் ஆகியோர் மீது சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தினார்கள். ஏர்செல் பங்கு களை மேக்ஸிஸ் வாங்கியதன் மூலம் தயாநிதி மாறனும், கலா நிதி மாறனும் ஆதாயம் அடைந் ததாக குற்றச்சாட்டு கூறப்பட் டது.


இந்திய கம்யூனிஸ்டு எம்.பி. குருதாஸ் குப்தா, சி.பி.ஐ. இயக் குனரிடம் தயாநிதி மாறனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சி.பி.ஐ. தயக்கம் காட்டுகிறதா என்று கேள்விஎழுப்பினார். அதற்கு அவர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித் தார். இதற்கிடையே கலாநிதி மாறன், தயாநிதிமாறன் ஆகி யோரிடம் மீண்டும் சி.பி.ஐ. அலுவலகத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தி உள்ளனர். அப்போது சிவசங்கரன் அளித்த புகார் தொடர்பாக சி.பி.ஐ. அதி காரிகள் கேள்வி கேட்டனர். அதற்கு 2 பேரும் பதில் அளித் தார்கள். அதிகாரிகள் கேட்ட சில ஆவணங்களையும் கொடுத் தனர்.

அவர்கள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து மேலும் விசாரணை நடந்து வருகிறது என்று சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமுலாக்கத் துறை தொடர்ந்துள்ள சட்டவி ரோத பண பரிமாற்றம் தொடர் பான வழக்கில் சட்டப்படி நடவ டிக்கை எடுக்கப்படும் என்று அந்தத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அசாமில் கலவரம் பிரதமர் ஆராய்வு

(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் போடோ லேண்ட் என்று அழைக்கப்படும் பகுதியில் உள்ள மாவட்டங் களில் கடந்த 20ஆம் திகதி வன்முறை வெடித்தது. இத னைத் தொடர்ந்து நடைபெற்று வரும் கலவரத்தில் ஏற்கனவே 40 பேர் பலியாகி உள்ளனர். நேற்று முன்தினம் இரவு சிராங்க் மாவட்டத்தில் மேலும் 3 பேரும், துப்ரி மாவட்டத்தில் ஒருவரும் பலியாகியுள்ளனர். இதனால் பலியானவர்கள் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்து உள்ளது. இதுவரை 11 பேரை காணவில் லை. கலவரத்தால் பாதிக்கப் பட்டு உள்ள கோக்ரஜார், சிராங்க் மற்றும் அதனை ஒட்டி உள்ள துப்ரி ஆகிய மாவட்டங் களில் காலவரையற்ற ஊர டங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில், கலவரத்தால் பாதிக்கப்பட்டு உள்ள பகுதிகளை பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கி ரஸ் தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் இன்று பார்வையிட உள்ளனர்.



இந்தியச் செய்திகள்

# மான் வேட்டையாடிய வழக்கு; சல்மான்கானுக்கு சிறை?



(மும்பை)

மானை வேட்டையாடிய வழக் கில் நடிகர் சல்மான்கானுக்கு 3 வருடம் சிறைத் தண்டனை கிடைக்கலாம் என பரபரப்பு தக வல் வெளியாகியுள்ளது. 1988 இல் 'ஹம் சாத்சாத் ஹைன்' என்ற படப்பிடிப்பில் இருந்த போது சல்மான்கான் இரு மான்களை சுட்டுக் கொன்றார்.

இதற்கு விலங்குகள் பாது காப்பு அமைப்பு எதிர்ப்பு தெரி வித்தது. சல்மான்கான் மீது வழக்கும் தொடரப்பட்டது. பல வருடங்களாக கிடப்பில் போடப் பட்டு இவ்வழக்கை ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் தற்போது விசாரிக்க தொடங்கியுள்ளது.

வனவிலங்குகள் சட்டப்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் 3 வருடம் சிறைத் தண்டனை கிடைக்கும். விரைவில் இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட உள் ளது. சல்மான்கானுக்கு சிறைத் தண்டனை கிடைக்கலாம் என மும்பை பட உலகினர் கிசுகிசுக் கின்றனர். இதனால் சல்மான் கான் தவிப்பில் உள்ளார்.

# அமர்நாத் யாத்திரைக்குச் சென்ற லொறி கவிழ்ந்து 16 பேர் பலி



(ஸ்ரீநகர்)

இமயமலையில் காஷ்மீரில் உள்ள அமர்நாத் குகை கோவி லில் பனி லிங்கத்தை தரிசிக்க தற்போது பக்தர்கள் சென்று வருகின்றனர்.


இந்த நிலையில் அமர்நாத் சென்று சாமி தரிசனம் செய்து விட்டு பக்தர்கள் ஒரு டிரக்கில் (லொரியில்) நேற்று முன்தினம் இரவு திரும் பிக் கொண்டிருந்த னர். அதில் 34 பயணிகள் இருந் தனர்.

ஜம்முவில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சம்பா மாவட்டத்தில் ஷமூர்ஹா மோர்க் என்ற இடத்தில் வந்த போது லொறி கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. பின்னர் வீதியோரம் உள்ள பள்ளத் தாக்கில் தலைகுப்புற கவிழ்ந்தது.

இதுபற்றிய தகவல் அறிந்த தும் இராணுவம், பொலிஸார் மற்றும் எல்லை பாதுகாப்பு படையினர் அங்கு விரைந்தனர். பள்ளத்தாக்கில் கவிழ்ந்து கிடந்த லொறியை மீட்டனர்.

இந்த விபத்தில் அதே இடத் தில் 9 பேர் இறந்தனர். மேலும் படுகாயம் அடைந்தவர்கள் ஜம்முவில் உள்ள வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்ட னர். அவர்களில் 7 பேர் உயிரிழந்தனர். அவர்களையும் சேர்த்து விபத்தில் பலியானவர் கள் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்தது. இவர்கள் தவிர 2 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. எனவே சிகிச்சைக்கு பின் அவர்கள் வீடு திரும்பினர்.

இது இந்த மாதம் அமர்நாத் யாத்திரையின் போது நடந்த 2ஆவது விபத்தாகும். கடந்த 14ஆம் திகதி அமர்நாத் யாத் திரை சென்று திரும்பியபோது ஜம்மு - ஸ்ரீநகர் நெடுஞ்சாலை யில் ராம்பான் என்ற இடத்தில் பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந் தது. அதில் 15 பேர் உயிரிழந் தனர்.




## அரசியல்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தரப்பினரும் சிலுவை சுமக்க வேண்டியிருக்கும்.

இலங்கையில் சகல இனங்களும் அரசியல்வாதிகளின் தவறான வழிகாட்டுதலால் இரத்தம் சிந்தியுள்ளன. தொகையில் ஏற்றம் இறக்கம் இருந்தாலும் இழப்புகள் பொதுவானவை.

வெறும் மண்ணை நினைத்து மனிதரை காவு கொடுத்தவர்கள் தமிழ் அரசியல் வாதிகளும் விடுதலைப்புலிகளும். இப்பொழுது புலிசார்பு வெளிநாட்டு தமிழர்கள் மற்றும் தற்போதைய சம்பந்தன் போன்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் இறந்தவர்களின் ஆவிகளை நினைத்துத் தப்பி . உயிர்வாழும் தமிழர்களை அழிப்பதில் வேட்டியை தூக்கிக் கொண்டு நிற்கிறார்கள்.

எஞ்சி இருக்கும் மக்கள் மத்தியில், இலங்கையில் இன மத சமத்துவமான ஒரு நாட்டை கட்டி எழுப்புவதற்கு யார் முன்வருவார்கள் என்பதே இன்று இருக்கும் கேள்வி.

இதற்கான பதில் இந்தியாவில் இருந்தோ அமெரிக்கவில் இருந்தோ ஜெனிவாவில் இருந்தோ வரமுடியாது. எமது மக்கள் மத்தியில் இருந்துதான் வரவேண்டும்.

நல்லது நடக்க நல்லது நினைப்போம

# ராகுலை சபை முன்னவராக்குங்கள் சோனியாவுக்கு எம்.பி.க்கள் கடிதம்

(புதுடில்லி)

லோக்சபா சபை முன்னவராக, ராகுலை நிய மிக்க வேண்டும். நாட்டு மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்த, இதுவே சரியான தருணம் என, காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு, அந்தக் கட்சியின் லோக்சபா எம்.பி.க்கள் 10 பேர் கடிதம் எழுதியுள்ளனர். அவர்கள் கூட்டாக எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:லோக்சபா சபை முன்னவராக, ராகுலை நியமித்தால், பொதுமக் கள் தொடர்பான பல பிரச்சினைகள் குறித்து அவர், துடிப்பான வகையில் பேச முடியும். அவரைப் பின்பற்றி, மற்ற எம்.பி.க்களும் நல்ல முறையில், மக் கள் பிரச்சினைகளை பேசத் தொடங்குவர். பாராளு மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும், காங்கி ரஸ் கட்சி பல சவால்களைச் சந்தித்து வரும் நிலை யில், பாராளுமன்றில் மிகப்பெரிய அளவில், துடிப பான வகையில், ராகுல் பணியாற்ற வேண்டிய நேரம் வந்து விட்டது. மேலும், எதிர்க்கட்சிகளுட னும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுடனும், ராகுல சிறப்பான நல்லுறவை பேணிக் காக்க முடியும்.

பல தலைவர்கள் இங்கிருந்தாலும், செயல்திற மிக்க இளம் தலைவர் தேவை என, நம் நாட்டு மக்களில் 50 சதவீதம் பேர் விரும்புகின்றனர்.

கடந்த பல ஆண்டுகளில், நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய, இளம் தலைவராக ராகுல் உருவாகி யுள்ளார். அவரால், இளைஞர்களையும், பொதுமக் களையும் கவர முடியும் அது கட்சிக்கு நல்ல பலன தரும். பாராளுமன்றத்தில் ராகுல், மிகப்பெரிய அளவில பணியாற்றினால், அது நாட்டு மக்களிடையே அவர் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும்.இவ்வாறு கடிதத்தில் எம்.பி.க்கள் கூறியுள்ளனர். லோக்சபா சபை முன்னவராக இருந்த நிதி அமைச்சர் பிரணாப முகர்ஜி, தன் பதவியை இராஜினாமா செய்து விட்டு, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, நாட்டின் 13ஆவது ஜனாதிபதியாகி விட்டார். அதனால், சபை முன்னவர் பதவி காலியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்தை - தினமுரசு 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரியாவில் தொடரும் தீவிர சண்டை

# குழந்தைகள் உட்பட 114பேர் பலி



(அலெப்போ)

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவில் சண்டை தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் தலைநகர் டமஸ்கசிலும் நடந்த சண்டையில் ஐந்து குழந்தைகள் உட்பட 114பேர் பலியாகியுள்ளனர்.

அலெப்போ நகரில் ஊடுருவியுள்ள தாக்குதலாளர்களை வெளியேற்ற ஆட்சியாளர் படைகள் மிகப் பெரிய தாக்குதலுக்கு தயாராகி வருகின்றன. தலைநகர் டமஸ்கஸ் மாவட்டத்தில் நடந்த சடையில் 7 பேர் உயிரிழந்துள்ளதாக பிரிட்டனை சேர்ந்த மனித உரிமை அமைப்பு கூறுகிறது.

சிரியா முழுவதிலும் நடந்து வரும் சண்டையில் நேற்று முன் தினம் மட்டும் பொதுமக்கள் 61 பேரும், படையினர் 32 பேரும், தாக்குதலாளர்கள் தரப்பில் 21 பேரும் ஆக மொத்தம் 114 பேர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆட்சியாளர்கள் நடத்திவரும் தாக்குதலில் வீடுகள் இடிந்து பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு எந்த உதவியும் செய்யமுடியவில்லை என்று போராட்ட குழுக்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அலெப்போ நகரை போராட்டக்காரர்களின் கையிலிருந்து முழுமையாக கைப்பற்ற தீவிர சண்டைக்கு ஆட்சியாளர் படைகள் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. உயிரிழப்புகள் இன்னும் அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

## பிரதமருக்கு துப்பாக்கி குண்டுகள்: முதியவருக்கு இரண்டரை ஆண்டுகள் சிறை

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய பிரதமர் உள்ளிட்ட தலைவர்களுக்கு, பொதியில் துப்பாக்கி குண்டுகள் மற்றும் டெட்டனேட்டர்களை அனுப்பிய, முதியவருக்கு, இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியாவின், பிரிஸ்பேன் நகரை சேர்ந்தவர் ஜான் கில்பர்ட், 81. அரசின் குடியேற்ற விதிமுறைகள், கல்வி கொள்கைகளால் வெறுப்படைந்துள்ள கில்பர்ட், முன்னாள் பிரதமர் கெவின் ருத், தற்போதைய பிரதமர் ஜூலியா கிலார்டு, எதிர்க்கட்சித் தலைவர் டோனி அபோட் ஆகியோருக்கு, பொதியில் எச்சரிக்கை கடிதத்துடன், துப்பாக்கி குண்டுகள் மற்றும் டெட்டனேட்டர்களை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக, கைது செய்யப்பட்ட கில்பர்ட், நீதிமன்றம் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார். வெளிநாட்டினரை, இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப் போவதாகவும், வெளிநாட்டினர் தங்கியுள்ள விடுதிகளில், தண்ணீரில் விஷத்தை கலக்கப் போவதாகவும், இவர், எழுதிய கடிதங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. கடந்த 2007ம் ஆண்டு முதல், இது போன்ற பயங்கரவாத பிரசாரத்தை, கில்பர்ட் மேற்கொண்டுவருவதாக, அரசு வழக்கறிஞர் குற்றம் சாட்டினார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, கில்பர்ட்டின் நடவடிக்கைகள் ஆபத்தானவை. எனினும் அவருடைய வயதை கருத்தில் கொண்டு, இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கிறேன் என்றார்.

# துப்பாக்கி வன்முறை கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவோம்



அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறை கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவருவோம் என அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொலராடோ மாகாணத்தில் அரோரா என்ற இடத்தில் உள்ள திரையரங்கில் "பேட்மேன்" வரிசையில் வெளியான சினிமா படம் திரையிடப்பட்டிருந்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த திரையரங்கிற்கு வந்த ஜேம்ஸ் ஹோம்ஸ் என்ற வாலிபர் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் 12 பேர் உயிர் இழந்தனர். மேலும் 70இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது மட்டுமின்றி அமெரிக்காவில் பள்ளிக்கூடம், கல்லூரி வளாகங்கள் மற்றும் பொது இடங்களில் துப்பாக்கி சூடு சம்பவங்கள் அரங்கேறி பலர் உயிர் இழப்பது அடிக்கடி நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவில் இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற இருப்பதால் துப்பாக்கி சூடு சம்பவங்கள் சர்ச்சையை உருவாக்கியுள்ளன. இதற்கிடையில் ஜனாதிபதி ஒபாமா, திரையரங்கில் துப்பாக்கி சூடு நடைபெற்ற அரோரா சென்றார்.

அந்த சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் நியூ ஆர்லியன்ஸ் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று அவர் கூறியதாவது:-

இது போன்ற துயர சம்பவங்கள் அமெரிக்காவில் உள்ள நகரங்களில் ஆங்காங்கே நடைபெறுவதை தடுத்தாக வேண்டும். இந்த நிலையை நாம் மாற்ற வேண்டும். எனவே துப்பாக்கி உரிமை வைத்திருப்பது குறித்து சட்டத்திருத்தம் கொண்டு வருவது அவசியம் ஆகிறது.

இது தேர்தல் ஆண்டு என்பதால் இதை கொண்டு வருவது சற்று சிரமமானது. ஆனாலும் துப்பாக்கி வைத்திருப்போர் பாதிக்கப்படாத வகையில் பரிசீலிக்கப்படும்.

இந்த துப்பாக்கி வன்முறை கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவோம். இதற்காக நான் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுடன் ஆலோசித்து கருத்து ஒற்றுமை ஏற்படுத்த தொடர்ந்து முயற்சி செய்வேன்.

ஏ.கே.47 துப்பாக்கி என்பது போர்முனையில் இருக்க வேண்டியதே தவிர நகரங்களின் தெரு முனைக்கு வரக்கூடாது. ஆகவே அது இராணுவத்தினர் கைகளில் இருக்க வேண்டும். கிரிமினல்கள் கையில் சிக்கக் கூடாது. என்னுடைய இந்த கருத்தை அனுமதி பெற்று துப்பாக்கி வைத்திருப்பவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன் என்றார்.

## ஆப்கானில் அமுக்கவெடியில் 7சிறுவர்கள் பலி!



ஆப்கானில் அமுக்க வெடியில் சிக்கி 7 சிறுவர்கள் பலியாகியுள்ளனர். ஆப்கானிஸ்தான் நாட்டில் கோர் மாகாணத்தில், 7 சிறுவர்கள் தங்கள் கால்நடைகளை மேய்த்துக்கொண்டிருந்தனர். அப்போது பாதுகாப்பு படையினரை குறி வைத்து தலீபான் தீவிரவாதிகள் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு தாக்குதல்களை நடத்தினர்.

இதில் கால்நடைகளை மேய்த்து கொண்டிருந்த சிறுவர்கள் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தனர். தீவிரவாதிகள் வைத்திருந்த பிரசர் பிளேட் குண்டுகளை அறியாமையால் ஒரு குழந்தை மிதித்ததாகவும் அது பயங்கர சத்தத்துடன் வெடித்து இந்தச் சம்பவம் நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது ஆப்கானிஸ்தானில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மியான்மருடன் தொடர்பை துண்டிக்குமாறு பாகிஸ்தானுக்கு தலிபான்கள் எச்சரிக்கை



(இஸ்லாமாபாத்)

மியான்மருடன் உள்ள தொடர்பை பாகிஸ்தான் அரசு துண்டிக்காவிட்டால், அந்நாட்டு தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்துவோம் என, தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

மியான்மரில், வங்கதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள ராகின் மாகாணத்தில், கடந்த மாதம் முஸ்லிம்களுக்கும், பௌத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது.

ராகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில், வங்கதேசத்திலிருந்து புலம் பெயர்ந்த, எட்டு லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்கள், மியான்மரில் குடியுரிமை கேட்டு போராடி வருகின்றனர். சட்ட விரோதமாக குடியேரியவர்களுக்கு, குடியுரிமை அளிக்க மியான்மர் அரசு மறுத்து விட்டது.

முஸ்லிம்களின் குடிசைகளை தீ வைத்து கொளுத்தி விட்டதாகக் கூறி, கடந்த மாதம் பெரிய அளவில் கலவரம் மூண்டது. இதில், 40 பேர் பலியாகினர். இதையடுத்து, மவுங்தா பகுதியில், அவசர நிலை அறிவிக்கப்பட்டு, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

மியான்மரில் முஸ்லிம்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடப்பதால் அந்நாட்டுடனான உறவை பாகிஸ்தான் அரசு துண்டித்துக் கொள்ள வேண்டும். அதுமட்டு மல்லாது, அந்நாட்டு தூதரகத்தையும் மூட வேண்டும். இல்லாவிட்டால் பாகிஸ்தானில் உள்ள மியான்மர் நாட்டினரையும், அவர்களது உடமைகளையும் தாக்குவோம் என, தேரிக் - இ - தலிபான் அமைப்பினர் எச்சரித்துள்ளனர்.

# ஈராக்கில் கடும் மோதல் : 11பொலிஸார் உட்பட 19பேர் பலி





(பாக்தாத்)

ஈராக்கில் இடம்பெற்றவரும் கடும் மோதலில் 11 பொலிஸார் உட்பட 19பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க படை முற்றிலும் வாபஸ் பெறப்பட்டதையடுத்து தீவிரவாதிகளின் தாக்குதல் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன், ஒரேநாளில் பல்வேறு இடங்களில் நடத்திய தாக்குதலில் 115 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் பாக்தாத்திலிருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் உள்ள ஹதித் நகரில் இன்று இராணுவ ஹெலிகாப்டரை நோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் ஒரு வீரர் கொல்லப்பட்டார். ஒருவர் காயமடைந்தார். இதையடுத்து ஹெலிகாப்டர் அவசரமாக தரையிறக்கப்பட்டது. பின்னர், தீவிரவாதிகளுடன் கடும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். இதில் 11 பொலிஸார் உட்பட 19 பேர் பலியாகியுள்ளனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய சோதனைச்சாவடிக்கு கண்காணிப்பு பணிக்காக இராணுவ ஹெலிகொப்டர் சென்றபோது இந்த மோதல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

# வடகடல் நிறுவனத்தை மேம்படுத்த சிங்கப்பூர் நிறுவனத்துடன் பேச்சு



(கொழும்பு)

வடகடல் நிறுவனத்தை சிங்கப்பூர் 'ரொறே' தனியார் நிறுவனத்துடன் இணைந்து மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்தரையாடல் கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் வடகடல் நிறுவனத்தின் பெறுபேற்றை கூட்டுவது, மற்றும் மூலதனத்தை வலுப்படுத்தும் வகையில் வங்கிகளினூடாக கடன திட்டங்களை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களும், வடகடல் நிறுவனத்தின் கீழான லுணுவில, வீரவில மற்றும் குருநகர் பகுதிகளில் அமைந்துள்ள மீன் வலை உற்பத்தி நிலையங்களினது தொழில்சார் நடவடிக்கைகளை முன்னேற்றுவது தொடர்பிலும், குறித்த நிறுவனமூடாக தரமான மூலப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு நவீன தொழில்நுட்பத்துடன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி.வி. ஜெகராஜசிங்கம், வடகடல் நிறுவனத்தின் தலைவர் பரந்தாமன், பொதுமுகாமையாளர் கேதீஸ்வரன் உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களுடன் 'ரொறே' நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் லோ சின் குவானும் உடன் இருந்தார்.

# ஞாயிற்றுக் கிழமை மின்வெட்டு

29.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர பாதுகாப்பு வலப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், யாழ் பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், மருதனார்மடத்தின் ஒரு பகுதி, இணுவில், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, நவாலி, ஆனைக்கோட்டை, கோண்டாவிலின் ஒருபகுதி, குளப்பிட்டி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, தட்டார்தெருப் பிரதேசம், கோம்பையன்மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு, மீனாட்ச்சிபுரம், பாசையூர், கொழும்புத்துறை, வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, குஞ்சர்கடை ஒருபகுதி, உடுப்பிட்டி, தொண்டைமனாறு, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ் நகரம் முழுவதும் மற்றும் இயக்கச்சி, பளை, மாசார், புதுக்காடு, மருதங்கேணி, உசன், மிருசுவில், மந்துவில், மீசாலை, வடக்கு மிருசுவில், நாவற்காடு ஆகிய இடங்களில் மின்வெட்டு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

புதுக்குடியிருப்பு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் வரலக்ஷ்மி பூசை நேற்றைய தினம் ஆலய பிரதம குரு தஷாங்கிக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற காலை 9.00 விசேட ஆராதனைகளுடன் ஆரம்பமாகி பூசையின் பின் காப்பு நூல்கள் வழங்கப்பட்டது. பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். (138)

# சிவில் சமூகத்துடன் ஒருங்கிணைந்த சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூகத்தினருடனான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். கிறின் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளதாக ஆணைக்குழுவின் யாழ். காரியாலய அதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள 60 சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் ஆணைக் குழு தயாரித்துக் கொண்டுள்ள மூன்றுவருட அடிப்படை கொண்ட முதியவர்களுக்கான உரிமை பாதுகாப்புத் தொடர்பான வேலைத்திட்டம் தொடர்பில் ஆலோசனை பெறுவது சம்மந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தச் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள சிவில் அமைப்புக்கள் இலக்கம் 01, மூனறாம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும், 0212222021 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொண்டு பதிவு செய்து கலந்துகொள்ள முடியுமெனவும் கனகராஜ் மேலும் தெரிவித்தார். (பா)



கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு முன்பள்ளி நிலைய மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரின் பாரியாருமான திருமதி இரவீந்திரதாசன் மங்கள விளக்கேற்றுவதைக் காணலாம்.

## சடலம் மீட்பு

கொழும்பு - பதுளை பிரதான வீதியின் ஹபுத்தளை பிரதேசத்தில் சடலம் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. 26 வயதான ஆண் ஒருவரின் சடலம் இங்கு கைப் பற்றப் பட்டுள்ளதாக ஹபுத்தளை பொலிஸார் தெரிவித்தனர். சடலம் தற்போது ஹப்புத்தள்ளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இந்திய...

மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இதே வேளை நேற்று இந்திய மீன்துறை அலுவலகம் முன்பு இராமேஸ்வரம் மீனவர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருவருக்கு...

கேளவிகளை முன்வைத்தார். இந்த நியமனம் குறித்த கடிதப் பிரதியைப் பிரதேச சபையின் செயலாளர் சபை உறுப்பினர்களுக்குக் காண்பித்தார். குறித்த ஊழியருக்கு ஏழு பணிகள் வழங்கப்பட்டு பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரினதும் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விவகாரம் சபையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த நியமன விவகாரம் குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவருக்கும் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை.

இச்சம்பவங்கள் குறித்து நீண்ட வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றதுடன் பிற்பகல் 2.00 மணிவரை கூட்டம் இடம்பெற்றது. இறுதியில் விரைவில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி இந்த ஊழியரின் நியமன விபரம் குறித்து விரிவாக ஆராயப்படும் என உப தவிசாளர் உறுதிமொழி வழங்கியுள்ளார். (165)

## முழுவீச்சில்...

அலுவலர் பிரிவுகளில் உள்ள பெக்கோ இயந்திர வாகனம் மூலம் வீதிகளையும், காணிக ளையும் 18 மில்லியன் ரூபா செலவில் துப்பரவு செய்யும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வீமன்காமம் மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக மாவிட்டபுரம் பகுதியில் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன், மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் ஸ்ரீமோகன், உதவித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், மற்றும் 515 ஆவது இராணுவ கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரந்தெனிய, மேஜர் நிலுபுல்ல, கேணல் கொலணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. வடக்கு அமைப்பாளரும், தெல்லிப்பழை பிரதேச சபை உறுப்பினருமான அன்புத்தோழர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் செ.திருஞானம ஆகியோரும், பிரதேச செயலக ஊழியர்கள், மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## என்னைக்...

பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியின்போது இவ்விடயம் தொடர்பாக எரிக் சொல்ஹெய்ம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தன்னை கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததை இலங்கைப் பொலிஸாரும் உறுதிப்படுத்தியதாக அவர் தெரிவித்தார். அந்தக் காலப்பகுதியில் இலங்கை பெரும் பாதுகாப்புப் பிரச்சினைகளில் இருந்தது. இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வது பேராபத்தாகவே இருந்தது. இருந்தபோதும் அந்நேரத்திலும் நான் பாதுகாப்புப் படையினர் எவரும் இல்லாமலேயே பயணித்தேன். ஆனால் இலங்கையிலுள்ள அரசியல் தலைவர்கள் பலத்த பாதுகாப்புடனேயே இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அந்நேரத்தில் இராணுவ பலம் மிக்கவர்களாக இருந்தனர். இதனால் கொழும்பில் பெரும் பதற்றமான சூழ்நிலை நிலவியதை அங்கிருந்து வரும் செய்திகள் உலகிற்கு உணர்த்தின. 2000 ஆம் ஆண்டு மே மாதம் 21 - 24 காலப்பகுதியில் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மீது இனந்தெரியாத நபர்கள் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதல் நோர்வேக்கு ஒரு எச்சரிக்கையை வழங்கும் பொருட்டே நடத்தப்பட்டதாக நம்பக்கூடியதாக அமைந்தது.

2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையில் நோர்வேயின் பங்கு கணிசமான அளவு இருந்தது. இக்காலப்பகுதியில் எரிக் சொல்ஹேய்ம் நோர்வேயின அபிவிருத்தி அமைச்சராக கடமையாற்றினார். 2005 ஆம் ஆண்டு இவர் தனது பதவியிலிருந்து விலகி சிறப்பு ஆலோசகராகப் பணியாற்றினார்.

## காணிப்...

அதற்கு மேற்பட்ட செயற்பாடுகளைக் கொண்டதாகவே அமைத்திருக்கின்றது. இதனால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கூடாக அதன் செயற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரசாங்க அதிபர்கள்- பொலிஸ் அதிகாரிகள்- முப்படையினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்களது ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும்.

இச்செயற்திட்டம் தேசிய வேலைத் திட்டமாக கருதப்படுவதனையடுத்து ஒவ்வொரு செயன்முறைக்கும் காலவரையறை முக்கிய பொறுப்புக் கூறும் நிறுவனம் மற்றும் ஒத்துழைப்பு வழங்கும் முகவர் அமைப்புகள் ஆகியனவும் வரையறுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பரிந்துரைகளில் இனங்காணப்பட்டுள்ள குறுகியகால் வேலைத் திட்டங்களை பரவலாகவும் துரிதமாகவும் இலகுவாகவும் முன்னெடுக்கக் கூடியதாக இருக்குமெனவும் செயலாளர் வீரதுங்க கூறினார்.

மேற்படி செயற்பாடொன்றில் ஈடுபடும் அமைச்சு அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் திறைசேரியை தொடர்புகொண்டு தமது செயற்பாடுகள் குறித்து விளக்கமளிப்பதன் மூலம் அதற்கான நிதியினை பெற்றுக்கொள்ள முடியும். காணி மறுசீரமைப்பு அமைச்சு இடம்பெயர்ந்தோரது காணிப்பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து வருகின்றது. எதிர்வரும் 12 மாத காலங்களில் இது தொடர்பான கற்கைகள் முடிவடைந்ததும் நான்காவது ஆணைக்குழு வொன்று நியமிக்கப்படும். இதன் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

எதிர்வரும் 2 வருடங்களுக்குள் காணிப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணப்படுமெனவும் கூறினார். பரிந்துரைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அநேக விடயங்களுக்கு நாடாளுமன்ற தெரிவுக் குழுவினூடாகவே தீர்வு காணப்பட வேண்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## லண்டனில்...

இதையடுத்து, ஒலிம்பிக்கில் பங்கேற்கும் நாடுகளின் அகர வரிசைப்படி, மைதானத்தில் அணி வகுத்தனர். இதில் முதல் அணியாக கிரீசும், கடைசியில் போட்டியை நடத்தும் இங்கிலாந்து வீரர்களும் அணிவகுத்து வந்தனர். பின் லண்டன் ஒலிம்பிக், பாராலிம்பிக் போட்டியின் ஒருங்கிணைப்பு சபைத் தலைவர் செபஸ்டியன் கோ, அடுத்து சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத் தலைவர் ஜாக்ஸ் ரோகி என, இருவரும் உரை நிகழ்த்தினர். ஒலிம்பிக் கொடி ஏற்றப்பட்டதுடன், ஒலிம்பிக் கீதம் இசைக்கப்பட்டு, பின் போட்டியில் பங்கேற்கும் வீர, வீராங்கனைகள், பயிற்சியாளர்கள், நடுவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பின் ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. தொடர்ந்து வாண வேடிக்கையுடன் தொடக்கவிழா நிறைவுபெற்றது.

போட்டியை இங்கிலாந்து இராணி இரண்டாம் எலிசபெத் தொடக்கி வைத்தார். தொடக்க விழாவில் அமெரிக்காவின் முதல் பெண்மணி மிச்செல் ஒபாமா, பிரேசில் அதிபர் டில்மா ரவுஸ்செப் உட்பட உலகம் முழுவதிலும் இருந்து 120 இற்கும் மேற்பட்ட தலைவர்கள் மற்றும் வி.ஐ.பி.க்கள் தொடக்க விழா அரங்கிற்குள் சங்கமித்து தொடக்க விழாவை கண்டுகளித்தனர்.

# மக்களின் வேண்டுகோளின்படியே மயான மதில் அமைக்கப்பட்டது



(வல்வெட்டித்துறை)


வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குட்பட்ட மயிலியதனை இந்து மயானத்திற்கான வெளிமுகப்புமதில் கட்டுவதற்கான வேலைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மக்களின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே மேற்கொள்பட்டது என விளக்குகின்றார் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் நடராஜா அனந்தராஜ்.

குறித்த மயானத்தின் வெளிமுகப்புமதில் நீண்டகாலமாக அமைக்கப்படாதிருந்த நிலையில், சுற்றுச்சூழல் பாதிப்பினால் அந்தப் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுவந்தனர்.

இந்தநிலையில் அந்த மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் தடவையாக முகப்பு மதில் கட்டுவதற்கான நிதிஒதுக்கீடு நகரசபையினால் மேற்கொள்ளப்பட்டது.

மயான அபிவிருத்திக் குழுவினருடனான தீர்மானத்திற்கு அமைவாக வாகனங்களை நிறுத்துவதற்கான இடவசதி, மக்களால் குடிநீருக்காகப் பயன்படுத்தப்படும் கிணறு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நன்னீர்க் கிணற்றை மக்களின் பாவனைக்காக வெளிப்புறமாகவிட்டு, மதில் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வேலைகள் ஆரம்பித்து பத்து நாட்களின் பின் நகராட்சி மன்றத்தின் உபதலைவர் கந்தசாமி சதீஸ் தலைமையில் மதிலை மேலும் வெளிப்புறமாக, கிணற்றை மயானத்திற்கு உட்புறம் விட்டுக் கட்டவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நகரசபைத் தலைவருடன் முன்கூட்டியே எதுவும் தொடர்பு கொள்ளாத நிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எழுத்து மூலம் விண்ணப்பித்தால்,மதில் கட்டுவதை நிறுத்திவிடுவதாகக் கூறி அந்தவேலையை உடனடியாக நிறுத்துமாறு நகரசபைத் தலைவர் நடராஜா அனந்தராஜ் பணித்துள்ளார்.



சுன்னாகத்தில் கார்கில்ஸ் புட் சிற்றியின் 193 ஆவது கிளை ஒன்று கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது...

## எழுத்தாணி வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் நான்காம் அணி இரண்டாம் அணி மாணவர்களின் எழுத்தாணி சஞ்சிகை நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டுவைத்தார்.

தற்கால சூழ்நிலையில் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு பிரச்சினைகள், சமயம், கலை, வாழ்வியல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி இந்த சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன், சுவீடன் பிரதிநிதி பியோனா பார்டன், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## பாம்பு தீண்டியவர் வைத்தியசாலையில் அனுமதி

(ஜெயபுரம்)

பூநகரி ஜெயபுரம் பகுதியில் நேற்று இரவு 7.00 மணியளவில் பாம்பு தீண்டிய ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜெயபுரம் பகுதியைச் சேர்ந்த மகேந்திரம் என்பவரே பாம்புக் கடிக்கு இலக்காகி முழங்காவில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (149)

## இலஞ்சக் குற்றச்சாட்டில் இருவர் கைது

(கொழும்பு)

களுத்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் விதான பத்திரணகே லக்ஷ்மன், லஞ்ச ஊழல் விசாரணை திணைக்கள அதிகாரிகளால் நேற்று மாலை கைது செயயப்பட்டுள்ளார்.

நாகொட பிரதேசத்திலுள்ள காணியொன்று தொடர்பான பிரச்சினையை தீர்ப்பதற்காக 30 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை ஆணைக குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்மி ஜயவிக்கிரமவின் நெறிப்படுத்தலின் கீழ் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7 ஏக்கர் பரப்பளவிலான காணியொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் அதற்கான பாதையொன்றை வழங்குவதற்கும் இலஞ்சம் பெறப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பிரதேச சபைத் தவிசாளரின் அலுவலக உதவியாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மஹாவலி அதிகார சபையின் பிரதேச பிரிவுக்கான முகாமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணியொன்றில் மூன்றரை ஏக்கரை வழங்குவதற்கு அரலங்வில பிரதேச பெண் ஒருவரிடம் சந்தேகநபரான முகாமையார் இலஞ்சம் கோரியுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக குழு தெரிவித்துள்ளது.

## மருத்துவத்திற்கு உதவி கோருகின்றனர்



(கிளிநொச்சி)

கந்தசாமி ரதீஸ்குமார் இல 24 யூனியன்குளம், கோணாவில் கிளிநொச்சியை சேர்ந்த இவர் தற்பொழுது சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்யவேண்டும் என மருத்துவர்களால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்து மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இவரது குடும்பம் இவருக்கான சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான மூன்று இலட்சம் ரூபாவினை பெற்றுக்கொள்ளமுடியாது பெரும் துன்பப்படுகின்றனர்.

எனவே இவரது குடும்பம் உதவிசெய்யும் கொடையாளிகளிடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றனர்.

## நட்டஈடு வழங்குமாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



தம்புத்தேகம நகர மத்தியில் கலாவெவ எச் வலயத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.

வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தமது பயிர்செய்கைக்கு நட்டஈடு வழங்குமாறு கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதன்காரணமாக அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதி போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. இதேவேளை, இரஜரட்ட விவசாயிகளின் கோபம் மற்றும் கோரிக்கை நியாயமானது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம் விவசாய குடும்பம் ஒன்றிற்கு வழங்குவதாக தெரிவித்த தலா ஒரு இலட்சம் ரூபா நட்டஈட்டினை எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் ரொக்கமாக வழங்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். தேர்தல் காலங்களாக இருப்பினும், விவசாயிகளுக்கு இவ்வாறு ஒரு இலட்சம் ரூபா வழங்குவதனை ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்கு எழுத்து மூலமாக வேண்டுமானாலும் எழுதிக் கொடுப்பதற்கு தாம் தயார் எனவும் ரணில் விக்கிரசிங்க குறிப்பிட்டார்.

## நீதிமன்றில் பொன்சேகா

முன்னாள் இராணுவத் தளபதி சரத பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது இராணுவத்திலிருந்து தப்பியோடிய 10 பேருக்கு வேலை மற்றும் தங்குமிடம் வழங்கியதாக சரத் பொன்சேகாவிற்கும் அவரது செயலாளருக்கும் எதிராக தொடரப்பட்ட வழக்கே நேற்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைகளின் போது பொன்சேகா நீதிமன்றில் சமூகமளித்திருந்தார். இந்த வழக்கு விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன.

## நல்லூரில் சிறுவனின் கைவண்ணம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் பெருமளவானவர்கள் வீதியுலா முடிந்த பின்னர் ஆலய முன்றலில் நீண்ட நேரம் தரித்து இருந்து செல்கின்றனர்.

இவ்வாறு தரித்துச் செல்பவர்கள் ஆலய சூழலில் பறிக்கப்பட்டுள்ள மணலில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வீடு கட்டிவிளையாடுவதும் உருவங்கள் செய்து விளையாடுவதும் அவர்களுக்கு ஆலயச் சூழலில் மகிச்சியைத் தருகின்ற விடயமாக இருக்கின்றது.

நேற்று வீதியுலா முடிவற்ற பின்னர் கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவன் ஒருவன் மணலில் முருகப்பெருமான் மயிலில் வீற்றிருக்கும் உருவத்தை வடிவமைத்துள்ளார். இந்த உருவப் பார்ப்பவர்களை மிகவும் கவர்ந்துள்ளது. மாற்றுத் திறனாளியான இந்த மாணவனின் செயலை பல்வேறு தரப்பினரும் பாராட்டியிருந்தனர். (02)

## ஊரைக் குழப்பும் நாச வேலை

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றில் திருவிழாவிற்கு கட்டப்பட்ட அலங்காரங்கள் நேற்று முன்தினம் இரவு விஷமிகளால் அறுககப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த தேவாலயத்தின் திரு இருதயநாதர் சிலை ஒன்றை மண்டைதீவுச் சந்திப்பகுதியில் அமைப்பது தொடர்பில் சர்ச்சைகள் நிலவிவரும் நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவங்கள் திட்டமிடப்பட்ட வகையில் மதக்கலவரங்களை உருவாக்கும் செயல் எனப் பலரும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

## மரண அறிவித்தல்

### செல்வன் கஜந்தன்

செல்வநாயகம் வேவியம்மாவின் பேரனாகிய கஜந்தன் நேற்று (27.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நிஷாந்தன், கஜந்தினி, நிரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரன் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.07.2012) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரன், பேர்த்தி
சகோதரர்கள்.

காரைநகர். (C/1597)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.